விலை சதம் 40 ★ பக்கங்கள்—8

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப்புரியாணி, நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோ ஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

எல்லோரும் போற்றும்
"ஏகாதசி"
மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் ஏதாவது இரண்டு அனுப்பி மேற்படி புத்தகம் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுங்கள். விநியோகம்பகுதி.
மில்க்வைற்
சவர்க்காரத்
தொழிலகம்
த. பெ. எண்: 77
யாழ்ப்பாணம்.

மலர் 18 தை 10 ஸபர் 2 ஞாயிற்றுக்கிழமை [23—1—77] இதழ் 343

துணுக்காய் வங்கிக் கொள்ளை

கைரேகை நிபுணர்கள் வந்து அடையாளங்களைப் பதிந்தனர்

முல்லைத்தீவு வீதிக்காட்டில் கார் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

துணுக்காய் கிராமிய வங்கியில் நடைபெற்றுள்ள கொள்ளை தொடர்பாக கொழும்பிலிருந்து கைரேகை நிபுணர்கள் வந்து அடையாளங்களை பதிவுசெய்துள்ளனர்,

இக்கொள்ளை தொடர்பாக மேலும் பல தகவல்கள் கி[illegible]ளன.

இக்கொள்ளையில் பாவிக்கப்பட்டதாகக் கூறப்[illegible] கார் முல்லைத்தீவு வீதிக் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கார் சாரதி தப்பிச் சென்று பொலிசில் புகார் செய்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

வங்கியில் 9,864 ரூபா ரொக்கப் பணத்துடன் 110 ரூபா பெறுமதியான "ஜிப்ஸி" ஒன்றும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவதினம் பிற்பகல் 2-30 மணியளவில் நான்கு இளைஞர்கள் பயங்கரத் துப்பாக்கிகளுடன் திடீரென வங்கிக்குள் புகுந்ததாகவும், இளைஞர் ஒருவர் வங்கி மனேஜரின் கழுத்துக்கு நேரே துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியதாகவும், மற்றொருவர் அங்கு கடமையாற்றிய பெண்ணின் கழுத்துக்கு நேரே கத்தியைக் காட்டி பயமுறுத்தியதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது

காரில் வந்த மற்றொரு இளைஞர், துப்பாக்கிகளுடன் வங்கி வாசலில் காவல்புரிந்து கொண்டிருந்ததாகவும் மேலும் கூறப்படுகிறது. இச்சமயத்தில் வங்கிக்கு அருகிலுள்ள பிரதம சங்கத்தில் சகல ஊழியர்களும் பலத்திருக்கு உள்ளே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

வங்கி மனேஜர் இரும்பு பெட்டிச்சாவி தன்னிடமில்லை யெனக்கூறியதைத்தொடர்ந்து அவர்கள் அங்கிருந்த பணத்தையும், ஜிப்ஸியையும் எடுத்துக் கொண்டு காரில் ஏறி முல்லைத் தீவு றோட்டை நோக்கிச்சென்றதாகவும் கூறப்படுகிறது.

வங்கி மனேஜர் துப்பாக்கியுடன் வந்த இளைஞர்களைக் கண்டதும், தன்னிடமிருந்த இரும்புபெட்டி திறப்பையாருக்கும் தெரியாமல் வன்னாசல் வீசிவிட்டதாக பின்னர் நடந்த விசாரணையில் தெரியவந்துள்ளது.

கார்ச்சாரதி தப்பிச்சென்றார்

துப்பாக்கி இளைஞர்கள் வவுனியாவில் அன்று காலை சி என் 4185 இலக்கமுள்ள ஏ பேசட்டி காரைவாடகைக்கு பிடித்து வந்தார்களென்றும் வழியில் சாரதியான பாலசுப்பிரமணியத்தின் கைகளைக் கட்டி பின் சீட்டுக்குள்போட்டு விட்டு, காரை செலுத்தி வந்தார்களென்றும் கூறப்படுகிறது. துணுக்காயில், இளைஞர்கள் வங்கிக்கு சென்ற சமயம் சாரதி, தமது கட்டுக்களை அவிழ்த்துக்கொண்டு தப்பிச் சென்று, பொலிசில் புகார்செய்தாரென்றும் கூறப்படுகிறது.

கார் முல்லைத்தீவு வீதியிலுள்ள காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு, மாங்குளம் பொலிசாரின் பொறுப்பிலுள்ளது. கார்ச் சாரதி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். [க]

லட்சம் அமெரிக்கருக்கு ஜிம்மி கார்ட்டர் மன்னிப்பு

வாஷிங்டன், ஜன. 22

அமெரிக்க ஜனாதிபதி திரு ஜிம்மி கார்ட்டர் தாம் பதவியேற்ற 24 மணி நேரத்திற்குள் தமது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றினர்.

[illegible] இராணுவ சேவையைச் செய்யத் தவறியவர்களுக்கு திரு. கார்ட்டர் எதிர்ப்புகளின் மத்தியில் மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இதன் மூலம் வியட்னாம் யுத்த காலத்திலும் வேறு சமயங்களிலும் கட்டாய சேவையைச் செய்யத்தவறி வெளிநாட்டிலும் உள்நாட்டிலுமுள்ள லட்சக் கணக்கான அமெரிக்கர்கள் தண்டனையிலிருந்து தப்புவரென்றும் இதன் மூலம் இவர்களில் பலருக்கு அமெரிக்க பிரஜா உரிமை கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

எனினும் வன்முறையினாலும் பலாத்காரத்தினாலும் கட்டாய இராணுவ சேவை சட்டத்தை உதாசீனம் செய்தவர்களுக்கு இந்த மன்னிப்புக் கிடையாதென்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

பலர் விடுதலை

புதுடில்லி, ஜன. 22

இந்திய மத்திய அரசின் உத்தரவுக்கிணங்க மேலும் பல அரசியல் கைதிகளை மாநில அரசுகள் விடுதலை செய்துள்ளன.

ராஜஸ்தானில் நேற்று 70 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஹைதராபாத்தில் கட்சித் தலைவர்களும், பூனாவில் 10 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (உ)

துரையப்பா சமாதிக்கு அனுரா அஞ்சலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவின் சமாதிக்கு சுதந்திரக் கட்சி வாலிப முன்னணியின் பிரதம அமைப்பாளர் திரு. அனுரா பண்டாரநாயக்கா நேற்றுக் காலை மலர் வளையம் சாற்றி அஞ்சலி செலுத்தினார்.

திரு. அனுரா பண்டாரநாயக்காவை யாழ்ப்பாணத் தொகுதி சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களான திரு. எம். எஸ். பேரின்பநாயகம், திரு. எஸ். எஸ். பிரான்சிஸ், ஜனாப் எம் ஜி. பஷீர் ஆகியோர் வரவேற்று சமாதிக்கு அழைத்துச்சென்றார்கள்.

அச்சமயம் அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ ஏ எஸ் விஜயபாலா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ ஏ ஜோசெப் மற்றும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் சமூகமளித்திருந்தனர்

வடபகுதிக்கு இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த திரு. அனுரா பண்டாரநாயக்கா பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார

மானிப்பாய் வெஸ்லி தியேட்டரில், நடந்த யாழ். மாவட்ட சுதந்திரக்கட்சி வாலிப முன்னணி கருத்தரங்கில் நேற்றுக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

நல்லூர் சுதந்திரக்கட்சிக் கிளை சார்பில், நண்பகல் போசனவிருந்தும், யாழ்ப்பாணம் சுதந்திரக்கட்சிக்கிளை சார்பில் தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

இன்று காலை வடபகுதி சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களை திரு. அனுரா பண்டாரநாயக்கா சந்தித்து கலந்துரையாடுவார்.

இன்று ஒப்பிளானில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியிலும் கலந்துகொள்வார். (க)

கருணாநிதி விலகவேண்டுமாம்

சென்னை, ஜன. 22

"தி. மு. க தலைவர் திரு. மு. கருணாநிதி தலைமைப்பதவியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்"

இவ்வாறு தி. மு. க. தலைவர்களில் ஒருவரான திரு. எஸ், சம்பந்தம் கருத்து தெரிவித்தார்

திரு கருணாநிதி தமது சொந்த நலனை கட்சியின் நலனுக்குச் சமமாகப் பாவித்து வருகிறார் எனவும் திரு. சம்பந்தம் தெரிவித்துள்ளார். (உ)

வடபகுதி ப. நோ. கூ. ச. காலஎல்லை நீடிப்பு

சங்கானை, சனி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ப நோ. கூ. சங்கங்களின் கால எல்லை மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இந்த நீடிப்பினை யாழ். மாவட்ட கூட்டுறவு அதிகார சபை வழங்கியுள்ளது.

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் கால எல்லை மட்டும் ஜனவரி மாதம் 20ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

கூட்டுறவு அதிகாரசபையின் தலைவராக அரசாங்க அதிபர் கடமையாற்றி வருவதை உள்நாட்டு வர்த்தக அமைச்சு சென்ற ஆண்டு முடிவுவரை அனுமதித்திருந்தது.

அரசாங்க அதிபர்கள் கூட்டுறவு அதிகாரசபையில் கடமை புரிவதால் அவர்களின் வேலைகள் பாதிப்பதாகவும் அதன் காரணமாக அப் பதவியிலிருந்து அவர்களை 1—1—77ம் திகதி தொடக்கம் விடுவிப்பதற்காக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கான வேறு ஒழுங்குகள் செய்யப்படாததால் அரசாங்க அதிபர்கள் அப்பதவியில் இம்மாதம் 31ம் திகதி வரை வகிக்கவென அனுமதிக்கப்பட்டுள்ளது. [க]

இளவரசி ஆனுக்கு அபராதம்!

லண்டன், ஜன. 22

இளவரசி ஆனுக்கு இங்கிலாந்து நீதிமன்றம் ஒன்று 40 ஸ்டேர்லிங் பவுண் அபராதம் விதித்துள்ளது.

அளவுகடந்த வேகத்தில் காரை ஓட்டியகுற்றத்திற்காகவே இளவரசிக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இளவரசியின் லைசென்ஸில் அவர் காரை ஓட்டத் தகுதியற்றவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ]

யாழ். லயன்
களியாட்டு விழா-77

(இவ் விழாவின் வருமானம் முழுவதும் யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் ஆஸ்பத்திரி அமைக்க வழங்கப்படும்)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக்கூப்பன்களை திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19,20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன்ஸ்கழகமுதலாவது விளையாட்டு விழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்குபற்றத் தகுதியுடையவன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்குபற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப்பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் காயத்திற்கு அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகளிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ அல்லது விழாவுடன் சம்பந்தப்பட்ட எந்த அதிகாரியிடமிருந்தோ எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டி நீதிபதிகளின் முடிவே இறுதியானதாகும்.

போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியான கூப்பன்களை அனுப்பவேண்டும்.

நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக அலங்கார ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி,]3] விவசாய ஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] விநோத உடைப் போட்டி பவனி. [6] மாணவர் உடற்பயிற்சிப்போட்டி,[7] பாடசாலை 'பாண்ட்' வாத்தியப் போட்டி, [8] 12 வயதிற்குட்பட்ட மாணவரின் விநோத உடைப்போட்டி. [9] நடனப் போட்டி. [10] சங்கீதப்போட்டி. [11] நாதஸ்வரப் போட்டி.]12] 'பொப்' இசைப் போட்டி. [13] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட்டம் (வடமாகாணம்) [14] 25 மைல் பாடசாலை மாணவர் சயிக்கிள் ஓட்டம் [வடமாகாணம்], [15] 5 மைல் மாணவிகள் சயிக்கிள் ஓட்டம் போட்டி [வடமாகாணம்], (16) 25 மைல் மரதன் கால் ஓட்டம்,]17] நீச்சல் போட்டி. [18] படகு ஓட்டப்போட்டி. [19] கராட்டி போட்டி.]20] ஆணழகன் போட்டி]யாழ். மாவட்டம்],]21] வாண விளையாட்டுப் போட்டி [அகில இலங்கை],]22] மாட்டு வண்டி சவாரிப்போட்டி [வடமாகாண[.]23] அழகு ராணிப் போட்டி (யாழ். மாவட்டம்)

நிகழ்ச்சி ……………………………………

[பெரிய எழுத்துக்களில்]

பெயர் ……………………………………

விலாசம் ……………………………………

வயது ……………………………………

விளையாட்டுப் போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக் கொள்வேன்.

……………………………

போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்தவேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்குபற்றுவதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்

……………………………………

ஃ விளையாட்டுப் போட்டிகளுக்கான நிபந்தனைகளும், மற்றும் விபரங்களும், ஈழநாடு வாரமலரில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும். அத்துடன் விழா இணைச்செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், என்ற விலாசத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இடமாற்றம்

சுழிபுரம், சனி கல்முனை மக்கள் வங்கியில் கடமையாற்றிய துரைராஜா இம் மாதம் முதல் சங்கானை மக்கள் வங்கிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ)

விற்பனைக்கு
அச்சக உபகரணங்கள்

டவமண்ட் பேசர் பேப்பர் வெட்டும் யந்திரம். கொம்போஸ் செய்யும் மேசைகள், தட்டுகள், ஆங்கில, தமிழ் எழுத்துக்கள் குறிப்படையாளங்கள், நீளமான மேசைகள், அலுமாரி, நீள்துவாரம்அடிக்கும்யந்திரம், இவைபோன்ற பல உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

பார்வையிடவும், வேறு விபரங்களுக்கும் தொடர்பு கொள்க:

வைத்தியசாலைக் காரியதரிசி,
இறீன் வைத்தியசாலை,
மானிப்பாய்.
5261

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்
கைதடி

லொறிக் கூலிக்கான கேள்வி

மேற்படி சங்கத்திற்கும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான லொறிக் கூலிக்கான கேள்வி கோரப்படுகின்றது. விபரங்களை தலைமைக்காரியாலயத்தில் பெற்று 31-1-77-க்கு முன் 'த[illegible]ன்மராட்சி மேற்கு [illegible]. சங்கம், கைதடி' [illegible]லாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பதில்
பொதுமுகாமையாளர்

கைதடி.
21-1-77 5309

சிறுவிளம்பரம்

விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சேர்.பொன் இராமநாதன் வீதியில் யாழ். வளாகத்திற்கு எதிராக மூன்று பரப்பு நீள்சதுரக்காணி, கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி, புகையிரத நிலையம் ஆகியவற்றிலிருந்து 5 நிமிட நடைதூரம். தொடர்பு கொள்க. 66, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 5311

ஒரு மாத வயதுடைய 'புறெறிலர்' குஞ்சுகள் வேம் செய்து ஊசி மருந்து ஏற்றப்பட்டவை விற்பனைக்குண்டு. பார்வையிடலாம். 8, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 5297

யாழ்; மாநகரசபை எல்லைக்குள் (தலையாளியில்) உள்ள எனது காணி நான்கு பரப்பும் விற்பனைக்குண்டு ஒரு பரப்பின் விலை ரூபா 6500/- C. கந்தசாமி, 26/3, வைரா ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 5257

புத்தம் புதிய நாஷனல் பனசோனிக் ட்ரான்ஸிஸ்ரர் ரேடியோ & டேப்ரெக்கோடர் 5410-மொடல் (NationalPanasonic) உடனடி விற்பனைக்குண்டு, தொடர்பு கொள்ளவும், இ. லோகேந்திரகுமார் 'வளர்மதி' பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 5279

தேவை

பண்டைக்கால புராதன பொருட்கள், பழையநாணயங்கள், சங்குகள், செம்பு, பித்தளை மற்றும் தளபாடங்கள் தேவை. அதிக விலையாயினும் வாங்கப்படும். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். றீயோ சினிமா, யாழ் நகர மண்டபம், யாழ்ப்பாணம். 5306

தேவை

பட்டதாரி வகுப்பிற்கு அரசியல் பொருளாதாரம் படிப்பிக்க ஒருவர் உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும், விளம்பர இலக்கம் 5295 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 5295

கனடாவிலிருந்து வரவிருக்கும் யாழ்ப்பாண வேளாள பொறியியல் நிபுணருக்கு திறமான, அழகான மெல்லியவைத்தியத்துறையினர், கணக்காளர் அல்லது விஞ்ஞான பட்டதாரி மணமகள் தேவை. சாதகத்துடன் முழு விபரங்களையும் அனுப்பவும். விளம்பர இல: 5230, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5230

பயிற்சி

ஆறுமாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா வகுப்புகள் விசேட செய்முறைப் பயிற்சியுடன் 10-2-1977 இல் ஆரம்பமாகவுள்ளது. உடன் பதிவு செய்து கொள்க. அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, மொசாக் கட்டடம் 11/B, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 5262

வெளிநாடுகளில் வேலைபெற ஏற்ற பயிற்சிகள் மேல்நாடுகளில் பயிற்சி பெற்றவர்களால் நடாத்தப்படும். வெல்டிங் (Electric and Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor) தொழில் பயில்வோருக்கு விசேஷ மாலை நேர வகுப்புகளும் உண்டு. National Institute of Engineering Technology, சமதி மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5298

கல்வி

H. N. C. E , N. C. G. E. கணித வகுப்பு 24-1-77 4 மணிக்கு ஆரம்பமாகிறது. ஏனைய எல்லாப் பாடங்களும் ஏனைய வகுப்புகளும் வண்ணார்பண்ணையிலும், வேலணையிலும் ஆரம்பமாகின்றன. பிரதம பதிவாளர், 508, கஸ்தூரியார் வீதி, வண்ணார்பண்ணை. 5312

வைத்தியம்

சிறுநீர் மஞ்சளாகவோ, வெந்தோ நிறம்மாறியோ போகுதல் செங்கமாரி. கல்லீரலைப்பாதிக்கும் இந்நோய் முறிவு நீர் முறித்தால் ஆபத்தானது. எந்நிலையிலும் இதனைக்குணப்படுத்திக் கைதேர்ந்தவர். சிறுபிள்ளைகள் வலிதிரும்பிவரசமந் குணப்படுத்துவார். காலவியல், தலைவலியல், சிரங்கு, குக்கல், மாதவிடாய்கால வயிற்றுவலி அற்புதமாகக் குணப்படுத்தப்படும். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம், வேலணை. 5286

எலெக்றோ பிளேட்டிங்

செய்வதற்குரிய சகல பொருட்களும் கிடைக்கும்

29-1-77, 30-1-77 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 5-00 மணிவரை பார்வையிடலாம்.

டியுறோ மெற்றல் இன்டஸ்றீஸ்
(DURO METAL INDUSTRIES)
12, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்
5314

எட்மன்ட்ஸ்

- மெடிக்கல் பிளாஸ்ரர்
- ஹெயார் பிளாக்கர்
- அலுகம் லோஷன்
- ரெயிலறிங் சோக்

றோயல் டிஸ்பென்ஸறி
யாழ்ப்பாணம்
போன்: 397 5305

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

"எனக்கென்று வாழ்வது கொஞ்சம் ...!"

கிளிவெட்டி— ம. குமாரசிங்கம்

> "அம்மா, அக்கா, நான்... உலகம் எத்தனையோ சொல்லலாம். ஆனால் 'உதவி' என்று முன்வருவதற்கு இந்த உலகிற்குத் திராணியில்லையே...! இதோ, எனக்கும் ஒரு சந்தர்ப்பம்... முயன்று பார்ப்போம். என் முன் நிற்கும் சவாலை என்னால் எதிர்நோக்க முடியாதா என்ன..."

கிழக்கு வெளுக்கின்றது என்பதை இறந்த ஓலைக் கிடுகு இடுக்கிடையால் தெரியும் பரந்த களங்கமற்ற வான வெளி உணர்த்துகின்றது. சேவல்கள் எல்லாம் தமது செட்டைகளை 'பட பட' என தட்டிக்கொண்டு பறக்கின்றன. காகங்கள் குயில்கள் மற்றும் பறவைகளின் ஆரவாரத்திற்கிடையில் அம்மா அடுப்பூதும் சத்தமும் அடிக்கடி கேட்கின்றது. நிச்சயமாகப் பொழுது விடிந்துவிட்டது. ஆனால் எங்கள் வாழ்வு இன்னும் விடியவில்லையே!

''ஏண்டா! நெட்டிலிங்க மாதிரி வளர்ந்து கும்பகர்ணன் மாதிரி விடிந்தபின்னரும் படுத்திருக்கின்றாயே. இன்னும் என்ன நீ குழந்தைப்பிள்ளையா? இருபத்தைந்து வயதாகவா ஆகின்றது! ஊருக்குள்ள போய் ஏதும் வேலைசெய்தால் உனது படிப்பா குறைந்துவிடும் அல்லது பெண்ணை இல்லை யென்று சொல்வார்கள்.''

நாள்தோறும் ஒலிக்கும் அம்மாவின் இந்தக் குரல் இன்று காலையிலும் ஒலிக்கின்றது. இச்சொற்களைக் கேட்கும் பொழுது எனக்கு தற்கொலை செய்யவேண்டுமென எண்ணம் வருவதுண்டு. ஆனால் பத்துமாதம் பக்குவமாய்ச்சுமந்து மரணவேதனைக்கு மத்தியில் பெற்று பாலூட்டி, தாலாட்டி சீராட்டி வளர்த்த பெற்றவளைச் சிறிது காலமாவது சந்தோஷமாக வைத்திருக்கவேண்டாமா?

என்னை க. பொ. த. உயர்தர வகுப்பு மட்டும் படிப்பதற்கு அம்மா பட்ட கஷ்டம் நரகலோகத்தில் கூட இருக்காது. தினமும் மாலை நாலு மணிக்கு மா இடித்து அதிகாலையில் நாலு மணிக்கு எழுந்து இடியப்பம், பாலப்பம், பிட்டு அவித்துக் கடைக்குக்கொடுத்து என்னையும் அக்காவையும் வளர்த்ததை இதயமுள்ள எவராலும் அவ்வளவு விரைவாய் மறக்க முடியாது. பொலிஸ் படைக்கும் பயந்து இரவிலும், பகலிலும் வெயிலிலும் திரிந்து வடிசாராய வியாபாரம் செய்தாலும் அவர்களுடைய கழுகுக் கண்களுக்கு எந்நாளும் தப்பமுடிவதில்லையே. பல நாள் ஜீப் வண்டியில் பிரயாணம் செய்ததோடு மட்டுமல்லாமல் அனுராதபுரச் சிறைச்சாலையையும் அம்மா பார்க்கத் தவறியதில்லை. இப்பொழுது கூட என்ன, சாராயம் மட்டும் விற்பதில்லை. நரைத்த தலையுடனும் இரத்தமில்லாத வெளிறி மெலிந்த உடலுடனும் இடியப்பம் பிட்டு அவிப்பதை நிறுத்தவில்லையே. நிறுத்தினால் அம்மாவும் நானும் அக்காவும் உயிர் வாழ முடியுமா?

இதுபோதையிலேயே எங்கள் மண்திண்ணையில் பல பேர் சொர்க்கலோகத்தைக் காண்பார்கள். சிலர் இரவு முழுவதுமே போதை மயக்கத்தில் துயில்வார்கள். ஊரில் அடிபட்டதை என் காதிலும் அடிபட்டது. ''தாய் சாராயம் விற்று சம்பாதிக்க மகள் கன்னம் புடிச்ச சம்பாதிக்கிறாள்... மகன் படிக்கிறான் அவர்களுக்கென்ன குறை''

அம்மா சாராயம் விற்பது உண்மைதான் ஆனால் அக்கா... ஒருநாளும் அவ அப்படிச் செய்யமாட்டா...!

ஊரவர்கள் கதைத்தது போல அம்மாவும் அக்காவும் பணம் சம்பாதித்தால்... நான் ஏன் படிக்கும்பொழுது படாத கஷ்டங்கள் பட்டேன்? ஏன், இப்பொழுதும் கூட நான் அணிந்து செல்கின்ற உடுப்பின் ஊத்தையும் வியர்வை நாற்றமும் என்று ஒரு மாணவரும் எனது பக்கத்துக் கதிரையில் இருக்கமாட்டார்கள். நான் முன் வாங்கில் இருந்தால் கூட எல்லோரும் சேர்ந்து எழுப்பிக்கொண்டு கடைசி வாங்கில் உடைந்த கதிரையிலும் மேசையிலும் இருக்க வைப்பார்கள். பொங்கல் பிறந்தநாள் தீபாவளி வந்தால் புது வருடம் மலர்ந்தால் எனது வகுப்பிலுள்ள எல்லோரும் புதுச்சட்டையுடன் வருவார்கள். ஆனால் எனது உடையிலோ நடையிலோ மாற்றமிருக்காது.

வசதிக்கட்டணம் கட்ட வசதியில்லை என்றபோது நான் தலைமையாசிரியரிடம் வாங்கிய ஏச்சுக்கள்! ''ஏழையென்றால் எல்லோரும் எள்ளி நகையாடுவார்கள்'' என்பது சரியென உணர்ந்தேன். கிராமசேவையாளர் காரியாலயம், காரியாதிகாரி காரியாலயங்களில் பல நாள் அலைந்தே நான் வசதியில்லாதவன் என்பதைத் தலைமையாசிரியரிடம் உறுதிப்படுத்தினேன்.

கண்ணோய் என்று தரும ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது கண்ணாடிக்கு நூறு ரூபா டாக்டர் கேட்க, வீட்டிற்கும் போய் எடுத்துவருகிறேன் டாக்டர் என்று கூறிவிட்டு வந்து அதே நோய்க் கண்களுடன் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றேனல்லவா? என்னுடன் படித்த சில மாணவர்கள் தங்கள் அழகை மிகைப்படுத்தவும் வரட்டுக்கௌரவத்திற்கும் கண்ணாடி போட்டார்கள். என்ன செய்யலாம், அவர்கள் கொடுத்துவைத்தவர்கள்!

என்னையும் அக்காவையும் அம்மா பெற்றெடுக்காவிட்டால் அம்மா நிம்மதியாக வாழ்ந்திருப்பாள்.

அம்மாவின் ஏக்கமட்டுமல்ல குடும்பச் சுமையை இனி நான் சுமக்க வேண்டிய உறுதியுடன் பல நாள் பட்டினி கிடந்து ஆசிரியர் என்றும் கிளார்க் என்றும் பல வேலைகளுக்கு விண்ணப்பித்தேன்.

இதுவரையில் ஒரு முடிவும் கிடைக்கவில்லை. செல்வாக்குடைய அரசியல்வாதிகளைச் சந்திப்பதானால் வெறுங்கையுடன் சந்திக்கமுடியுமா?

அக்காவையும் அம்மாவையும் எனது உழைப்பில் வைத்து ஏதாவது தொழில் தேவை. விவசாயம்செய்யலாம் என்றால் அதற்கும் குடியிருக்கின்ற ஒரு பரப்புக் காணியை விட ஒரு துண்டுப் பரப்புக் [illegible] தான் இல்லை, கூலிக்காவது போடிமார் வயல்களில் வேலை செய்யலாம் என்றால் எனக்கு வேலை தெரியாது என்று கதிர்காமப் போடியார் பாலிப் போடியார் இன்னும் எத்தனையோ போடிமார் யாருமே வேலைதருவதாகஇல்லை. ''இரும்புப் பெட்டிகளுக்கும் ஏழைகளின் இதயத்திற்கும் சம்பந்தம் இருக்கமுடியுமா?''

அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கின்றதுதான். சில நாளில் நான் வேலைபழகமாட்டேனா? தொடர்ந்து வேலை தெரியாதவனும் இருக்க நான் என்ன அவர்களைப்போல் போடியாரா? என்னசெய்யலாம். அப்படியான கல்வியைக் கற்றுவிட்டேன். காரியாலயத்தில் வேலை செய்ய மட்டும் தானே படித்தேன், கழனியில் வேலை செய்யும் முறையையும் அவர்கள் படிப்பித்திருந்தால் நான் இன்று வயல் வேலை செய்தாவது அம்மாவையும் அக்காவையும் சந்தோஷப்படுத்தியிருப்பேனே! ஆனால் பெண்ணாய்ப் பிறந்த அம்மா உழைக்க நானும் உண்கின்றேனே!

திண்ணையில் அம்மா குந்திக்கொண்டிருக்கின்றதா வெளியில் சென்று யாரையும் பிடித்து எழுதிப்போட்டால் அந்தப் பணமாவது மாதா மாதம் கிடைக்கும். மீண்டும் என்னைப் பெற்றவளின் வாயிலிருந்து உதிர்ந்த சொற்கள், அவள் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தானே செய்கின்றது.

''உன்ர அப்பன் ஓடிப் போனதுபோல ஓடிப்போய் எங்கேயாவது வாழுங்கோவன் நான் சிவனேயென்று கிடக்க'' அம்மா மீண்டும் வார்த்தைகளைப் பொரிந்து கொண்டே இருக்கின்றாள்.

எனக்கு இரண்டு வயதாக இருக்கின்றபோது அப்பா தேசிய லொத்தரில் விழுந்த முதலாம் பரிசுடன் ஓடி மறைந்தவர்தானாம். இன்னும் இல்லை. இதையும் அம்மாதான் கூறினாள். அப்பாவுக்குக் குடும்பத்தில் அக்கறை இருந்திருந்தால் அப்படித்தான் ஓடியிருப்பாரா? அப்பா ஓடியிராவிட்டால் - ஏதும் தொழில் செய்தால்- அம்மாதான் அப்பம் சுடுவாளா? இல்லற வாழ்க்கையை அனுபவிக்கவேண்டிய அக்காதான் வாழாவெட்டியாய் இருப்பாளா, ஏன் நான்கூட ஏதும் தொழில்செய்வேனே;

அக்காவுக்கு திருமணம்பேசிப் போனால் இது எத்தனையாவது திருமணம் என்று மணமகனின் தாய் தந்தையர் கேட்கின்றனர். அப்படியானால் அக்காவுக்கு இனி வாழ்வின் வசந்தமே இல்லையா? இறக்கும் வரை இச் சோகத்துடன் தான் வாழ்வாளா? விதி அதுவானால் நான் என்ன செய்யமுடியும்? நானும் அவளுடன் திருமணம் செய்யாது வாழ்ந்தால் அவளுக்குத் துணையாக இருக்குமல்லவா?

''எல்லோருக்கும் ஊர்க் கோலம் இரண்டுதரம்''. என்னையும் அக்காவையும் பொறுத்த வரையில் இறுதி ஊர்வலம் தானே நடக்கும். அந்த ஊர்வலத்தில் கூட வரட்டுக்கௌரவத்துடன் வாழ்பவர்கள் கலக்க மாட்டார்களே!

அம்மா செய்த சாராயம்விற்கின்ற தொழில்தானே அக்காவின் வாழ்வைப் பாதித்தது. வாழ்வளிக்கின்ற தொழிலே வாழ்வைப் பறித்துவிட்டதால்...

எல்லோருடைய வீட்டிலுமே 'பூப்பு'நன்னீராட்டுவிழா, புதுமனை குடிபுகுவிழா, திருமண விழா இப்படி எத்தனையோ விழாக்கள் நடைபெற்றுவிட்டன. ஆனால் எங்கள் வீட்டில் எந்த விழாவுமே இதுவரையில் நடைபெறவில்லையே...

தலையிடிக்கின்றது. வீட்டில் நாள்தோறும் யோசித்தால் தலையிடிக்காமல் என்ன செய்யும் என்று எனக்குள்ளேயே யோசித்துக்கொள்கிறேன். டிஸ்பிரின் வாங்கிப்போட்டால் தலையிடி நிற்கும். அதற்கும் பணம்வேண்டாமா? தலையிடி என்ன பெரிய உயிர்போற வியாதியா? இல்லையே என்று மனதைத் திடப்படுத்திக் கொள்கிறேன்

சிவகுரு பியோனின் சைக்கிள் எங்களுடைய வேலியற்ற வளவின்முன் வந்து நிற்கின்றது. இந்த உலகத்தில் எங்களுக்குக் கடிதம் போட யார் இருக்கிறார்கள், அப்படி நான் அறிய யாரும் இல்லையே...!

''நீங்கள் தானே தம்பி பாலன்!'' சிவகுரு பியோனின் கனிவான வார்த்தை. 'ஆம்' என்பதற்கு அறிகுறியாக தலையைமட்டும் ஆட்டுகின்றேன்.

ஆண்டுக்கொரு ஆவணிக்கொரு கடிதம் வந்தாலும் சிவகுரு பியோன் எங்களை மறக்காமல் இருக்கின்றாரே! அரசாங்கக் கடிதம் என்பதை மட்டும் பார்த்தவுடன் புரிந்துகொள்ளக்கூடியதாய் இருக்கின்றது.

அம்மா மா இடித்த உலக்கையுடன் ஓடிவர, அக்கா கூட்டிய மிலாறுடன் ஓடிவருகிறாள். நீண்ட நாளின் பின் மூவரும் ஒன்றாகச் சிரிக்கின்றோம். கோட்டும் சூட்டும் குளிர்மையான கண்ணாடியும் ஷூசும் மாட்டி மின்சார விசிறியின் கீழ்இருந்து பார்க்கும் வேலை எதுவும் கிடைக்கவில்லை. அரசாங்கத்தின் கூட்டுப்பண்ணையில் எனக்கும் காணி கிடைத்திருக்கின்றது. ஏழை எந்நாளும் ஏழையா? ஒருகாலுமில்லை என என் மனது அடித்துக்கூறியது. கூட்டுப் பண்ணையில் முயற்சியால் பயிர்களை பச்சைப்பசேலெனத் தோற்றமளிக்கச்செய்யலாம். ஆனால் எங்கள் வறண்ட வாழ்க்கை பசுமையாகுமா? ஏன் ஆகாது? முயன்றுபார்ப்போம் - முயற்சி திருவினை யாக்கும் என்பார்களே!

[வாழும் கற்பனை]

ஒரு நிமிட மர்மம் (2)

—கிரான் ஜீவன்

அழகிய ஓவியங்களுக்கிடையே அழகில்லாமல் கிடந்தாள்- ஓவியங்களுக்கு ''மோடலாக''ப்போஸ் கொடுக்கும் கட்டழகி வனஜா. அவள் எழிலரசிதான் என்பதை அந்தச் சித்திரகூடத்திலிருந்த ஓவியங்களே சான்று கூறின. சுற்றிலும் இருந்தபடங்களில் சிரித்துக்கொண்டும் குனிந்துகொண்டும், நெளிந்துகொண்டும் எங்கு பார்த்தாலும் அவளேதான் காட்சியளித்தாள்.

பிரேதத்தின் அருகில் அவளுடைய கைப்பை கிடந்தது. அதில் அவளுடைய உதட்டுச் சாயக்குழாய் தவிர மற்றவை எல்லாம் இருந்தன.

இன்ஸ்பெக்டர் இன்பநாதன் கூலிங்ஸ் கிளாசை எடுத்து முகர்ந்து பார்த்தார். அதில் மிகவும் சக்திவாய்ந்த-உடனே கொன்றுவிடக்கூடிய நஞ்சின் வாடை வீசிற்று.

''இந்தச் சம்பவம் எப்படி நேர்ந்தது?'' என்று ஈசிச்செயரில் முடங்கி உட்கார்ந்துகொண்டு சிகரெட் குடித்துக்கொண்டிருந்த ஓவியர் தர்மாவிடம் கேட்டார் இன்ஸ்பெக்டர் இன்பநாதன்.

''இன்று மாலை இங்கே என் நண்பர்களுக்கு ஒரு விருந்து ஏற்பாடுசெய்திருந்தேன். வனஜாவை நான் அழைக்கவில்லை. ஆயினும் அவள் வந்துவிட்டாள். எனக்கு அவள் மொடலாக இருந்தாள். இரவு எட்டு மணிக்கு மற்ற எல்லோரும் விடைபெற்றுக்கொண்டார்கள். ஆனால் வனஜா இரண்டில் ஒன்று தெரிந்துகொள்ளாமல் போகப்போவதில்லை என்று பிடிவாதம் செய்துகொண்டிருந்தாள். நான் அவளை மணம்செய்யமுடியாது என்று கூறிவிட்டேன்.'' வனஜா தன்கைப்பையிலிருந்து எதையோ எடுத்துக் கலந்து போட்டு ஒரே மடக்காகக் குடித்துவிட்டாள். துப்பாக்கியால் சுடப்பட்டதுபோல் உடனே விழுந்து மடிந்துவிட்டாள் என்று கூறிமுடித்தான் தர்மா.

''நீ எதையாவது தொட்டாயா தர்மா'' என்று கேட்டார் இன்பநாதன்.

''இல்லை நான் அப்போதிருந்து பிரமை பிடித்துப்போய் உட்கார்ந்திருக்கிறேன்'' என்றான் தர்மா.

''நல்லது தர்மா இனிச் சிறைச்சாலையில் உட்கார்ந்திருக்கலாம்'' என்றார் இன்பநாதன்.

இன்பநாதன் ஏன் அவ்வாறு கூறினார்.

(6ம் பக்கம் பார்க்க]

பழம் சுவைக்க விலை கேட்டான்!

மாம்பழம் சுவைக்க
மனம்கொண்ட ஒருவன்
மாம்பழச் சந்தைக்கு
மகிழ்வுடன் சென்றனன்!
எத்தனை உருவில்
எத்தனை மாம்பழம்!
பழத்தின் நிறமோ
மனதைக் கவர்ந்தது!
மாம்பழக் குவியலில்
ஒன்றினைத் தேர்ந்து
ஆவல் மேலுற
அதனையே பார்த்தனன்!
மாம்பழம் வேண்டுமா?
மணம், குணம், உருசி
எல்லாம் நிறைந்தது...
மாம்பழப் புராணம்
பாடிய பின்னர்
விலையை மாம்பழ
வியாபாரி கூறினன்!
மாம்பழம் சுவைக்க
வந்த மனிதனோ
முகத்தைச் சுளித்தான்!
மாம்பழத்துடனே
விலையையுந்தந்தால்
பழம் வாங்கிடுவேன்
என்றனன் வந்தவன்
'பித்தம் தலைக்கேறிப்
பிதற்றுகின்றான்'என
வியாபாரி நினைத்தான்!
பக்கத்தில் நின்ற
முதியவர் ஒருவர்
சிரித்துவிட்டு
செப்பினர் இவ்விதம்:
மங்கையை மணக்க
பணம் கேட்பதுவும்
மாம்பழம் சுவைக்க
விலை கேட்பதுவும்
இரண்டும் ஒன்றுதான்!
தம்பி கேட்டதில்
தவறேதும் உண்டோ!

—ஆனந்தி நடராசா

AVRA
ஒரியண்டல் பாம்

நல்லறிஞர் காட்சியில் சி. வை. தா.

மு. கந்தையா—ஏழாலை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மேற்காட்டிய இம்மூன்று சான்றுகளும் குறித்த பிரகாசிகையுடையவர் கருதியவை கட்டுத் திட்டத்திற்கும் மீறிச் சந்தேகிக்கவைக்கின்றன.

இப்படியான இவர் கூற்றுக் கேக தாமோதரம்பிள்ளை பரமதத்தவர் (கிறிஸ்தவர் என்று அவரே சொல்லிற்றிலர்) என்று நாம் கூறுவதானால்,

ஆழமுறு மாவிப்பாய்க் கல்லூரிப் பாதிரிமார் நியமிக்க மிக்க
தாழுதவின் ஆங்கிலமும் தமிழிற் சிறிதும் பயிற்றி உணச்சாதமிட்டு
வாழுமிடமும் அளிப்ப ஆறுமுக நாவலனென் போன் தானங்கே
பாழிவாய்த் திறந்துண்டு கற்று முன்னங் கிறீத்தவனும் பண்பில் நின்றான்.
அவ்வகையால் அமைக்கு வாய்ப் 'பைபிள்' என்ன ஆறுமுக நாவலனுங் கிறீத்த வப்பேர்
கவ்வை பெற்ற சிலவாண்டு பின்னர்......
—திவாந்தர சைவ விநோதம் வீரசாமி

என்ற கவிதைகளின்படிக்கு நாவலரும் கிறிஸ்தவர் ஆயிருந்தார் எனக் கருதுவதற்கு என்ன தடை? நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரும் நாவலரும் சமகாலத்தவர் தானே!

இப்படிக் கேட்கிறபோது, அப்படியல்ல வீராசாமி அப்படி இகழ்ந்தது வேறு காரணம் பற்றி என்று சொல்லுவதே யதார்த்தமாகுமேனில் சபாபதி நாவலரும், சி. வை. தாவை அப்படி அவதூறு கூறியது வேறு காரணம்பற்றி என்பதே யதார்த்தமாகும். ஆம், உண்மைதான்! தமது குருவாகிய இராமலிங்கசுவாமிகளை நாவலர் விரோதித்ததற்காக வீராசாமி நாவலரை இகழ்ந்தார். அதே சீரில் தாம் குருவாக அபிமானித்த சிவஞான முனிவரை சி. வை. தா. கண்டித்ததற்காகச் சபாபதி நாவலர் சி. வை. தாவை இகழ்ந்தார்.

கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், ஆராய்ந்து கண்டதே மெய்.

உண்மை இப்படியிருக்கவும், சி. வை. தா.வைப் பற்றி சபாபதி நாவலர் இவ்வாறு கூறுவதற்கு அவர் கிறிஸ்வராக இருந்தமையே காரணமாகும் எனக் கூறுவது உண்மையைத் திரித்துரைக்குஞ் செயலாகும்.

இனி இத்திரிபுரை இடம் பெற்ற அக்கட்டுரையில் கலம் 3 பந்தி 2இல், 'அவ்வாறே சி. வை. தாவும் பிறப்பிலும் கிறிஸ்தவராக இருந்து பின்னர் சைவரானாரோ [illegible]' என்றதும் ஆதாரமற்றதாகும். அன்றியும் அங்கு மற்றோர் பந்தியில் (அவர்களால்) ஆதாரமாகக்கொள்ளப்பட்ட திரு. வையாபுரிப் பிள்ளையே தம் நூலின் மற்றோர் பந்தியிற் கூறும் கருத்து இதற்கு எதிர்மாறாகப் பேசுகின்றது. இங்கு, மேல் எடுத்தாளப்பட்ட வையாபுரிப் பிள்ளை கூற்றில் பந்தி 1. இதைத் தெரிவிக்கும். சைவமரபில்...பிறந்தவர்கள் என்று அதில் இருத்தல் காணலாம்.

இனி, வையாபுரிப்பிள்ளை அவர் சமயம் பற்றிக் கூறுவதையும் சற்று உற்று நோக்கி உணர்தல் வேண்டும்.

'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்பது நம்முன்னோர் கொள்கையல்லவா: 2. சில காலம் கிறிஸ்தவர்களோடு கூடித் தம் கருத்தை முற்றுவித்துக்கொண்டார், 3. தாமும் கிறிஸ்தமதச்சார்பினராய்ச் சில காலம் இருந்தவர். 4. இதனால் புடமிட்ட பொன்போல அறிவொளி மிக்க சைவசமயத்திற் பேரன்பு பூண்டு விளங்கினர்.'

இப்பகுதியில் 4 வசனங்கள். 2 ஆம் 3 ஆம் வசனங்கள் சி. வை. தாவின் கிறிஸ்தவச் சார்பு காட்டுவன. 1 ஆம் வசனம் அதற்குக் கருதியான ஏதுவைத் தெரிவிக்கின்றது. 4 ஆம் வசனம் அத்தன்மை அவரைக் கிறிஸ்தவர் என்று சொல்ல இடமளிக்காது எனக் குறிப்பிடுகின்றது. பின், புடமிட்ட பொன் போலானார் என்றதுக்கு முன்னும் பொன்தான் என்பதே பொருள். சைவமரபிற் பிறந்தவர் சைவந்தான். பொன் பொன்னாயிருந்தே பின் புடமிட்ட பொன்னும் திகழ்வெய்தும். அன்றி, அது இடையில் மற்றொரு லோகமாய் மாறி பின் புடமிட்ட பொன்னாதலில்லை. அவரும் கிறிஸ்தசமயச் சூழ்நிலையிலும் தன்னுண்மையிற் சைவந்தான். பொன் சூழ்நிலையால் மாசு படிந்து மழுங்கிப்போய் வெளித்தோற்றத்தில் செப்புபோலத் தோற்றலாம். அதற்காக அது அப்போது பொன்னல்ல எனலாகாது. அவரும் சூழ்நிலையால் சைவப்புறத்தோற்றம் மழுங்கியோ விகாரப்பட்டோ இருந்திருக்கலாம். இவ்வகையான ஒரு விளக்கமே வையாபுரிப் பிள்ளை கூற்றினுட் கொள்ளக் கிடக்கின்றது. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

சி. வை. தா. ஒருபோதுமே மனம்பூர்வமான கிறிஸ்தவராயிருந்திருக்கமுடியாது என்பதற்கு அவர் கூற்றிலேயே அகச்சான்றுண்டு. தேசாபிமானம் பாஷாபிமானம் மதாபிமானம் என்ற இவையில்லாதார் பெருமையும் பெருமையா? இது தமது பதிப்புரையொன்றில் அவர் கூறியது. வையாபுரிப்பிள்ளையும் இதனை தமது நூல் பக்.186-ல் எடுத்துக்காட்டியிருக்கிறார். சைவாபிமானம் அவர் பிறப்புரிமைச்சொத்து. சந்தர்ப்ப சூழ்நிலை எதிர்மாறாயிருந்த காலத்தும் விவேகிகளாயுள்ளவர்களிடத்தில் அது அற்றுப் போயிருத்தல் இயலாது.

இனி மறுபக்கம் பார்க்குங்கால், அவர் மனப்பூர்வமான கிறிஸ்தவராகச் சிலகாலம் எனினும் இருந்திருப்பாரானால், பெருந்தகைமையும் கௌரவமுமிக்க கலாசாரபூஷணமாகிய அவர் சைவமகத்துவம் எழுதியிருக்கவேமுடியாது. எழுதினும் கிறிஸ்துவ கண்டனஞ் செய்திருக்கமுடியாது.

மேற்கண்ட விளக்கத்தின் பிரகாரம் கிறிஸ்தவ மதச்சார்பினராய்ச் சில காலம் இருந்தார் என வையாபுரிப்பிள்ளை கூறுவதன் தாற்பரியம் வேறு. அவர் சில காலம் கிறிஸ்தவராயிருந்தார் என்று கட்டுரையாளர் 19-12-76 பத்திரிகையிற் கூறுவது வேறு. சி. வை. தா கிறிஸ்தவராக இருந்தபோதும் 'சைவத்தைஇகழாமல் வாழ்ந்தார்'. என்று சைவ வரையறைகூட இல்லாமலே அவர்கள் 21-11-76 பத்திரிகையிற் கூறியது வெகுதூரம் பட்ட வேறு.

வையாபுரிப்பிள்ளை கூற்றுப் பொன்னின் பொன்னுந்தன்மை கெடாமலே பேணியிருக்கின்றது. கட்டுரையாளர் கூற்று முதற் கட்டத்தில் நிரந்தரச் செம்பாக்கி இரண்டாங் கட்டத்தில் இடைக்காலச் செம்மாக்கியிருக்கின்றது. இதனால் இவ்விருவர் கூற்றுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் வெளிப்படை. இனி,

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் சி. வை. தாவோடு, ஏழாலை சைவப்பிரகாசமூலமாகவும், பிறவகையாலும் 22 வருட (1876—1898) காலம் இடையறாது நீண்ட பெருந்தொடர்பு பூண்டவர். மிகக் கண்டிப்பானவர். முகத்தாட்சண்யம் பார்க்கும் சுபாவம் இல்லாதவர். பாரபட்சமோ ஒரமோ பேசும் வழக்கமில்லாதவர் என்று புகழ்பெற்றவர். எழுத்துத்துறையின் சேணிடையுந் தீங்கடையாத் திட்பமும் நுட்பமும் ஒட்பமும் ஒருங்கேயுடையவர் என்பது அறிஞர் பிரசித்தம். அந்தன்மையான் அன்றைய ஒரு சில வித்வான்தவிர ஏனைய கல்வியாளருக்கு அவர் ஒரு சிம்ம சொப்பனம். சி. வை. தா.வின் சமகாலத்தவர் எவர் கூற்றிலும் பார்க்கப் புலவர் கூற்றுக்கு உத்தரவாதம் மெத்த மெத்த அதிகம். அவர் சி. வை. தா.வைக் குறித்துக் கூறுவதென்ன? அவர் குலம் வேளாளர் குலம். சமயம் சைவம் என்ற அவ்வளவே.

திரு. வையாபுரிப்பிள்ளை சி. வை. தா வின் பேரபிமானி யெனினும், அவர் தகைமை, ஆராய்ச்சிகள் பற்றி நன்கறிந்தவரெனினும், பின்னையவர்களின் சமயப்போக்கு முதலிய சந்தர்ப்பங்களையறிதலில் புலவர்க்கிருந்த வாய்ப்பு மிகமிக அதிகம். தாமோதரனாரின் தமிழ்க்குரு புலவரின் தந்தை வழிப் பாட்டனாரின் தமையன் இத்தன்மைகளால் வையாபுரிப் பிள்ளை கூற்றின் தாற்பரியத்தைப் புலவர் கூற்றின் விளக்கத்தில் அமைத்து விளங்குதலே மேல்.

சி. வை. தா. சராசரி வித்துவான்களுக்குரியதரத்துக்குமேல் உயர்ந்த ஒரு சிலரில் மிகப் பிரசித்தமான ஒருவர். சாதாரண மனித இயல்பிலிருந்து எத்தனையோபடி உயர்ந்தவர். 'வலம்புரி நடுவுட் சலஞ்சலம் என்ற சூரிய நாராயணர் காட்டும் உவமையிலே அவருடைய அருமையும் பெருமையும் கொலுவிற்றிருக்கின்றன. பிறப்பிற் கிறிஸ்தவர் என்றது ஆதாரமற்ற கூற்று. சில காலம் கிறிஸ்தவச் சார்பினராயிருந்தவரென்பதும் அவர் சைவநிலைவிட்டுப் போன நிலையைக் காட்டாது. வையாபுரிப்பிள்ளையின் புடமிட்ட பொன் உவமையும், குமாரசுவாமிப்புலவர் குறிப்பும் அதற்கு ஆதாரமாகின்றன என்ற உண்மைகள் இக்கட்டுரையின் கருத்தும்பொருளாகின்றன.

ஆராய்ச்சி என்பது மக்கள் அறிவாற்றலின் ஒருவகையான வளமே என்பது அறிஞர் துணிபு. வளத்துக்கு எல்லைக் கோடுகள் இருத்தல் இயலாது. அது வரம்பின்றியோடும். ஆதலால் ஒரு நியமம் வேண்டும்.

கடுக்கனல்ல காதே பிரதானம். ஆராய்ச்சியிலும் பார்க்க எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளின் தகைமையே பிரதானம்.

மேற்கொண்ட பொருள் உயிர் ஆராய்ச்சி சத்திர சிகிச்சை. உயிர்பிழைக்கவேண்டும். என்பதே நோக்கமாதலால் உயிரைத் தீண்டாத அளவுக்கு அவதானமாகச் சத்திர சிகிச்சை நடைபெறுவது போலத்தான் எங்கள் முயற்சியும் அமையவேண்டும்.

கலையுலகத் தொடர்புக

தங்கவேலுவுட
ஒரு பேட்டி !

'டணால்' தங்கவேலு, கே. ஏ. தங்கவேலு, 'டுப்' தங்கவேலு—இப்படி பலவித அவர் அழைக்கப்பட்டகாலம். தங்கவேலுவின் புகழ் கொடி கட்டிப் பறந்தது அப்போது டெலிபோனில் பேசமுடியாது. தங்கவேலுவின் மனேஜர் பேசவிடமாட்டார். மனேஜருக்கு முன்னுக்கே தங்கவேலு இருப்பார். டெலிபோனில் பேச எத்தனித்தால் அந்த மனுஷன் விடவேமாட்டார் 'இல்லே, இப்பதான் வெளியே போனாரு. ஸ்ருடியோவுக்கு காலேயிலே போனவரு எப்பதிரும்புவாரோ தெரியாது' இப்படி என்னென்னவோவெல்லாம் சொல்லித் தட்டிக்கழித்துவிடுவார்.

தங்கவேலுவை சந்திக்க வேண்டுமானால் அவர் வீட்டில் சந்திக்கமுடியாது. ஆபிசில் சந்திக்கமுடியாது. அப்பொழுது எங்கே சந்திப்பது? ஸ்ருடியோவில்தான். ஸ்ருடியோவிற்கு எப்படிப்போவது?

எனக்குஇருந்த செல்வாக்கை வைத்துப் புகுந்துவிடலாம். இனி எந்தக் கொட்டகைக்குள் புகுவது! இதையும் கண்டு பிடித்து தங்கவேலுவையும் கண்டுபிடித்தாயிற்று. ஒவ்வொரு சூட்டிங்குக்குமிடையே வந்து உட்காருவார், பேசுவார். ''பேட்டி காணவேண்டும் சார்.''

''என்னவா?
போறீங்க?''
''உங்களுக்கு
நேரத்தில்.''
''இந்தப்பா ந
கூப்பிடுங்க -
இவன் எனக்கிட்ட
மாட்டேங்கிருனே
டிலா-எனக்கு அ
ரூட்டிங்?'''ஏ.வி
என்றிரூர் வந்தவ
அதுஇன்னைக்கு
நடனக் காலேயிலே
யும் அதற்கப்புற
விலே. இப்படி
தானேக்கு தொட
குதே என்னசெய்
நீங்க எந்தநாள் ந
கிறிங்க-போதாதக்
லைச்சுக்குவம்.
கழிச்சு ஆபீசுக்கு
லுங்க.''

எஸ்.

''ஆபீசுக்கா,
சாம், நீங்க எந்த
விலேயிருப்பீங்க எ
ஞங்க அங்கேயந்த
நேரத்தை பிக்ஸ்
வாங்'' என்றேன்.
''இல்லே சார், நீ
மனேஜர் அடிக்கிற
கண்டுபிடிச்சிட்டீங்
இருக்கு. நான்
சொல்லிவைக்கிறே
களை பேசிறன்
[illegible]
நீங்க ஸ்ருடியோவு
வந்து ஆல்லயாவே
இரண்டு நாள்
நானுமணிபோல
செய்யுங்க'' என்ற
வேலுவை நம்பி நா
நேரத்திற்கு 'டிரக்ட
போன் செய்தேன்,
ரைத் தெளிவச
னேன், அப்படியும்
தங்கவேலு இல்லே''
சொல்லிவிட்டார்.
இரவு தங்கவேலுவி
கம் ராஜாஜி ஹோ
பெறுவதாக கே
அங்கு போனேன்.
நின்றவர் என் பெ
டதும் தங்கவேலு
யோட்டுக்கொண்டி
இடதிற்கு அழை
ரூர். எனக்கண்ட
வேலு கதையில்
கொண்டார்.
''என்ன சார் நீ
மணிக்கு டெலிபோ
ணலேயே'' என்று
''உங்கள் நந்த
இருக்கும்வரைக்கும்
யாரவேதுஉங்களோ
போனிலே பேசமு
என்று கோபித்
டேன்.
''ஆமா உங்களுக்
சான்ஸ் எக்
கெடுத்திடுவார் பே

தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்

வண. எம். ஏ. இரத்தினராஜா

தமிழ்மொழி தனிப் பெருமை பெற்றது. அது தொன்மை வாய்ந்தது. அம்மொழி என்று ஆரம்பமானது என்பது சொல்வதற்கில்லை. அது, தமிழர் வாழ் தனி நாட்டில் தனிப்பெரும்மொழியாய்ப் பிறந்து, கிடந்து, இருந்து, தவழ்ந்து, நின்று, நடந்து வளர்ந்திருக்கிறது. இன்னமும் வளர்ந்துகொண்டே வருகிறது.

தாய்மொழியாம் தமிழை வளர்த்தவர்கள் அநேகர். ஆதித் தமிழன் சங்கங்கள் அமைத்துத் தமிழை வளர்த்தான். சேர, சோழ, பாண்டிய மன்னர் தத்தம் ஆதிக்கத்தின் கீழ், தமிழ்ப் புலவரை, பாவலரை வைத்து ஆதரித்து அவர்கள் மூலம் தமிழை வளர்த்தனர். தமிழன் மதம் சைவமாக மட்டுமிருந்த காலத்தில், தமிழை வளர்த்தவன் சைவத்தை வளர்த்தான், சைவத்தை வளர்த்தவன் தமிழை வளர்த்தான். சைவமும் தமிழும் பின்னிக்கிடந்த காலம் ஒன்றிருந்தது.

கி. மு. 2-ம் நூற்றாண்டுக்கும் கி. பி. 16-ம் நூற்றாண்டுக்குமிடையே, சைவம் மட்டும் வளர்ந்த தமிழகத்தில் பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களும் வளரத் தொடங்கின. இம்மதங்களைத் தழுவிய புலவர்களும் பாவலரும் தம் புதிய மத தத்துவங்களைத் தம் தாய்மொழியாம் தமிழிலே வெளியிட முன்வந்தனர் அவர்களது பெரு முயற்சியால் பௌத்தம் சமணம் என்பன வளர்ந்ததோடு தமிழும் வளர்க்கப்பட்டது. சைவம் வளர்த்த தமிழைப் பௌத்தம் வளர்த்தது. சமணமும் வளர்த்தது. சைவரால் வளர்த்த தமிழ் மொழி, பௌத்தராலும் சமணராலும் வளர்க்கப்பட ஆரம்பித்தது. இக்காலத்தில் வெளிவந்த மணிமேகலை, வீரசோழியம், குண்டலகேசி, விம்பசார கதை முதலிய பௌத்த நூல்களும், ஏனைய சமண நூல்களும் தமிழை அழகையும் பெருமையையும் வளர்த்த புறமத நூல்களாம். அன்று தமிழை வளர்த்தோர் பௌத்தர், தமிழை வளர்த்தோர் சமணர். தமிழ்மொழியின் ஐம்பெருங் காப்பியங்களுள் மணிமேகலை, குண்டலகேசி என்னும் இரு பெருங்காப்பியங்களுமே பௌத்தர் வளர்த்த தமிழ் இலக்கியமென்றே. அன்று தமிழை வளர்த்தவர் சைவர் மட்டுமின்றி பௌத்தரும் சமணரும் என்பது மறுக்கொணாச் சாத்தியமாகும்.

சைவரும் பௌத்தரும் சமணரும் இவ்வாறு தமிழை வளர்த்துவரும்வேளை, தமிழகத்தில் கிறிஸ்தவம் பரவ ஆரம்பித்தது. கிறிஸ்துமதம் கி. பி. முதலாம் நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவில் பரவியது என்பது சரித்திர உண்மையாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கிறிஸ்தவக் கோவில்களும் சத்திடங்களும் முதலாம் நூற்றாண்டு தொட்டே அங்கு பரவியிருந்தன என்பதற்கும் போதிய சரித்திர ஆதாரமுண்டு. கி. பி 10-ம் நூற்றாண்டளவில் வெளியான சைவசித்தாந்தக் கொள்கைகளில் கிறிஸ்தவ போதனைகள் பல பிரதிபலித்திருக்கின்றன என்பதுவும் ஆராய்ச்சியாளர் முடிபாகும். தாயுமானவர் பாடலில் புகுந்துள்ள கிறிஸ்தவ சத்தியங்கள் எவையெனக் காண்பதே ஓர் தனி ஆராய்ச்சியாகும்.

எனினும் கிறிஸ்தவர்கள் முன்னின்று தமிழைப் படிக்கவும் அதனை வளர்க்கவும் முற்பட்டது கி. பி. 15-ம் நூற்றாண்டிலேயாகும். இத்திருத்தொண்டில் முன்னோடியாய் விளங்கியவர்கள் தமிழகத்துக்கு வந்த மேல்நாட்டுக் கிறிஸ்தவக் குருமாரே. அவர்கள் தமிழை வளர்க்க முற்பட்டபோது தமிழிலே பல இலக்கியங்களை ஆக்கியதுமன்றி தமிழ்மொழியின் தனிப் பெருந்தன்மையையும், திறமையையும் நுட்பமாய் ஆராய்ந்து ஆராய்ச்சி அடிப்படையில் தமிழை அறியவும் வளர்க்கவும் முற்பட்டனர்.

அவர்களது ஆராய்ச்சியின் பலனாக தமிழ்மொழியானது கிரேக்க, லத்தீன் போன்ற ஐரோப்பிய மொழிகளிலும் நுட்பமானதும் அழகானது எனக் கண்டனர்.

இவ்வாறு தமிழ்மொழியின் சீரையும் சிறப்பையும் அதன் தெய்வத் தன்மையையும் அகில உலகுக்கும் எடுத்துக்காட்டியவர்கள் ஐரோப்பிய கிறிஸ்தவக் குருமாரே! தமிழின் சிறப்பை வெளியுலகுக்கு எடுத்துக்கூறியது மட்டுமன்றி, பல துறைகளிலும் தமிழை வளர்த்தவர்கள் அவர்களே. இதுவரை தமிழை வளர்த்தவர்கள்

தமிழை இருந்தவா
அணைத்து வளர்
யன்றி, அரந்த
திருத்தங்களைச் செய்
தார்களில்லை. இ
தொண்டைத் தமி
கிடவர்கள் இந்த
மக் கிறிஸ்தவக்
இவர்கள் காலம்
ழிலே வசனநடை
வந்ததில்லை; வ
மொழிபிரித்து எ
இல்லை. தமிழ் நெடு
சீராக்கப்பட்டதில்
அகராதி இருந்ததில்
நூல்கள் எதுவும்
எந்ததில்லை. (

புகள்-7

டன்

வா? எப்ப காணப்
க்கு வசதியான
ா நம்ப வைபவேலைச்
- வந்திட்டாளு-
க்கிட்டவே நிக்க
ருவே! வந்திட்
அடுத்து எங்கே
ஏ.வீ.எம்.மிலே''
ந்தவர். ''அடடா
கு முடியாதே,
யிலேதான் முடி
க்புறம் சாரதா
ப்பிடி இரண்டு
நாடகத்து இருக்
செய்யப்போறீங்க.
நமக்கு தங்கு
த்துக்கிடையிலே
. இரண்டுநாள்
க்கு போன் பண்

என்றேன்! அதற்கு தங்கவேலு சொன்னபதில், 'நான் இங்கே சாம் புரடியூசர்கிட்டே பேசுறேன், எல்லாம் மனேஜர்தான்! அவர் சொல்ற ஸ்ருடியோவுக்கும் போறேன் நடிக்கிறேன்! எல்லாம் அவரேதான்!''

''சரி இன்னைக்காவது பேட்டி தர்றீங்களா?''

''அதுக்கென்ன தாராளமா, நாடகம் முடிஞ்ச உடனே பேட்டி. நீங்க தயாரா?'' என்றார். நாடகம் பார்க்க எனக்கு ஆசை அதைச் சொன்னேன்-

''அதுக்கென்ன பார்த்திட்டு அதுக்கப்புறம் எல்லாருமே சேர்ந்து ஆபீசுக்குப்போய் அங்கேயே பேட்டியை வைச்சுக்குவம்'' என்றார்! இந்தருணத்தை விட்டால் பிழை. கிடைப்பது அரிது என்று அந்தநாள் சரி என்றுவிட்டு அங்கே நின்றேன்! தங்கவேலு ஒரு பையனைக் கூப்பிட்டு செக்ரட்டரி சாரிட்டே சொல்லி மயில்வாகனனை முன்சீட்டிலே உட்காரவை'' என்றார்.

சாப்பாட்டை மறந்தேன்

நாடகம் வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் நாடகம், 9-00 மணியளவில் முடிவடைந்தது- எனக்கோ நல்லபசி, எங்காவது சாப்பிட்டுவிட்டு இவர் ஆபீசுக்குப் போகலாமென்றால் பிறகு இந்த மனுஷனை சந்திப்பது சந்தேகம்! ஆனா உள்

ஸ். பி. மயில்வாகனன்

ர். வேண்டாம்
ாத்த ஸ்ருடியோ
ங்க என்னு சொல்
ந்து சந்திச்ச
க்ஸ் பண்ணிக்க
றன்.
ர், நீங்க நம்ப
கிற டுக்ளைக்
டிங்க பேசவ
ன் அவர்கிட்டே
டுறேன்.மயில்வா
எனக்கு
சொல்லி.
பாவுக்கெல்லாம்
சயே எனக்கு
ழிச்ச ஒரு
டெலிபோன்
ன்றார். தங்க
நான் சொன்ன
க்டாக' டெலி
ன், என் பேவ
லிவாகச் சொன்
பும் மனேஜர்
லை'' என்று
ர். அன்று
லுவின் நாட
ஹாலில் நடை
கேள்விப்பட்டு
ன். வாசலில்
பெயரைக்கேட்
லு மேக்கப்
டிக்கும்
ழுத்துச் சென்
ண்டதும் தங்க
யில் முந்திக்

நீங்க மூணு
போன் பண்
றார்.
(மனேஜர்)
நம் தாங்க
னோடை டெலி
முடியுமா?''
பித்துக்கொண்

ருக்கு வருகிற
னைத்தையும்
பேசிக்குக்கே''

ளுக்குள்வைத்துக் கொண்டே இல்லையென்றுவிடுவார் மனேஜர்! இந்தப் பயத்தினால் சாப்பாட்டை மறந்தேன்! தங்கவேலுவோடு ஒட்டிக்கொண்டேன்! அவர் காரில் ஏறிக்கொண்டேன்! நேராக கார் போய் அவர் வீட்டில் நின்றது! அங்கு இறங்கிய தங்கவேலு நீங்க ஆபிசிலே போயிருங்க நான் ஐந்து நிமிஷத்திலே வந்துடுறேன் என்று என்னை ஒரு காரில் அனுப்பி வைத்தார்! நான் போய் ஆபிஸ் வாசலில் உட்கார்ந்துகொண்டேன்! தங்கவேலு சொன்னது போல் 5 நிமிஷத்தில் வந்து விட்டார்! ''ஆரம்பிக்கலாமா'' என்றேன்!

நானும் எனது நண்பரும் டெக்கோடிங் மெஷினை எடுத்து வந்து ஆயத்தமானோம். ''நீங்க தயார்பண்ணுங்களே இதோ வந்துடுறேன்'' என்று உள்ளே போனவர் சில மணி நேரம் சென்று வெளியேவந்தார். ''சரி ஆரம்பிப்போமே, கேள்விகளைக் கேளுங்க'' என்றவர் அதே மூச்சில் ''ஆமா நீங்க சாப்பிட்டாச்சா'' என்றார். ''காலையில் பார்த்துக்கொள்வோம்'' என்றேன். என்ன ''அப்படிச் சொல்லிட்டீங்க நம்மவீட்டுக்கு வந்து சாப்பிடாமல் போறதா? முதல்லே சாப்பாடு, அப்புறம் பேட்டி.

அப்பொழுது நேரம் இரவு 1-00 மணி. இந்த நேரத்தில் ''எங்கே சார் சாப்பாடு, காலையிலே பார்த்துக்கலாம்'' என்று மீண்டும் கூறினேன். அவர் விட்டால்தானே. ''மனேஜர் அந்த நம்பரை எடு'' என்றார். மனேஜர் அந்த நம்பரை சுழற்றி விட்டு அவர் கையிலேயே [illegible] என்றார். தங்கவேலு போய் ஏதோ பேசினார். பிறகு வந்து உட்கார்ந்தார். ''ஒரு மணி நேரத்திலே சுடச்சுட தோசை வரும். அதுக்குள்ளே பேட்டியை முடிச்சிடுவோம்' என்றார். ''அப்படியா'' என்று பெருமூச்சுவிட்டுவிட்டு பேட்டியைக் காண ஆரம்பித்தேன். பேட்டியும் நன்றாகவே அமைந்து விட்டது. பேட்டியைக்கேட்டு திருப்தியோடு இருக்கும் நேரத்தில் ஒரு கார் வந்து நின்றது. கமகமவென தோசை மணக்க ஆரம்பித்தது. இருவர் பாத்திரங்களில் சாம்பார்சட்னி உள்ளே கொண்டுபோய் வைத்தார்கள். சுடச்சுட தோசை சாப்பிட்டோம். நேரம் அதிகாலை 4-00 மணி. இந்த நேரத்தில் ''இப்படிச் சுடச்சுட தோசை அனுப்பியது சரோஜா, உங்க வீட்டுக்காரங்களா? என்றேன் தங்கவேலுவிடம்.

''அதெல்லாம் பெரிய இடத்திலேயிருந்துதான் உங்களுக்கு சாப்பாடு வரவழைத்தேன்'' என்று புரியாத புதிராக விட்டு விடப்பார்த்தார். நானும் விடாமல் 'இந்த நேரத்தில் இப்படி தோசை செய்து அனுப்பியவர் பெரிய இடமாகத்தானிருக்க வேண்டும். யாரென்று சொல்லுங்களே'' என்று வற்புறுத்தினேன். 'லே' செட்டியார் வீட்டிலிருந்து வரவழைச்சேன்'' என்றார்.

வாறே ஏற்றி
ர்த்தார்களே
வேண்டிய
செய்து வளர்த்
இப்பெருந்
மிழுக்கு ஆக்
ஐரோப்பி
ஒருபசரே
வரை தமி
நான் வெளி
ளங்கள்
எழுதப்பட்ட
நடுங் கணக்கு
தமிழிலே
இல்லை. தமிழ்
ம் அச்சிலே
(தொடரும்)

சிலம்பம் ஆடுவதிலும் தீரர் வ. உ. சி.!

பாரத நாட்டின் விடுதலைப் போர் சரித்திரத்தில் கப்பலோட்டிய தமிழர்-வ. உ. சிதம்பரனருக்குத் தனி இடம் உண்டு. தேச பக்தியையே உயிர் மூச்சாகக்கொண்டு விளங்கிய அப்பெரியார் சுதேசி இயக்கத்தின் மாவீரராகவும் திகழ்ந்தார். அப்பெருமகன் குடும்ப வாழ்வில் எப்படி ஒரு தந்தைக்குரிய பாசத்தோடும், பரிவோடும் விளங்கினர் என்பதையும் அவரது இதர குணங்களையும் இக்கட்டுரையில் அவரது புதல்வர் விளக்குகிறர்.

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்',

என்னும் குறட்பா இசைக் குரலின் ஒலிக்க நான் தினமும் காலையில் துயில் எழுவேன்.

என் தந்தையவர்களுக்கு மிகவும் பிடித்தமான திருக்குறள்களில் ஒன்று! ''மலர்மிசை ஏகினான்'' மீண்டும் மீண்டும் அவர்கள் இக்குறளையே இசைத்துக்கொண்டிருப்பார்கள், பிள்ளைகள் படுக்கையிலிருந்து எழும்வரையில்.

''எழுந்திரு'' என்று உரத்த குரலில் கூவி யாரையும் அவர்கள் எழுப்புவதில்லை. ''மலர்மிசை'' ஒலித்தால் நாங்கள் எழுந்துவிடுவோம்.

இரவில் துயில் கொள்ளும் முன்பும் இதே குறளை அவர்கள் சொல்லிக்கொண்டே கண்ணயர்ந்துவிடுவார்கள். நாங்கள் பெரும்பாலும் முன்பே உறங்கிப்போயிருப்போம்.

0 0 0

''காலை எழுந்தவுடன் படிப்பு— பின்பு
கனிவு கொடுக்கும்
நல்ல பாட்டு''

என்று கவிஞர் பாரதியார் பாடியதுபோல, காலைக்கடன்களை முடித்த பின்பு, பிள்ளைகள் பள்ளிப் பாடங்களைப் படிக்க வேண்டும்.

பிள்ளைகள் 'தார்சா'வில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருப்போம். அம்மா, மேல் வராந்தாவில் 'ஈஸிச்சேர்' இருக்கையில் சாய்ந்தவாறு ஏதேனும் படித்துக்கொண்டோ எழுதிக்கொண்டோ இருப்பார்கள்.

பாடத்தில் ஐயமேற்பட்டால், அப்பாவிடம் போய்க் கேட்டுத் தெளிவு பெறலாம். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டும் சொல்லிக்கொடுப்பதில் அப்பாவுக்கு மிகுந்த ஆர்வம்—ஆனால், கணக்கு என்றால் ''ஏலே, [illegible] பிள்ளையிடம்போய்க்கேட்டுக்கோடா!'' என்று சொல்லி விடுவார்கள். கணக்கின்றிப் பொருள் ஈட்டிக் கணக்கின்றிச் செலவு செய்த கரங்கள் — கணக்கில் விருப்பமில்லாததில் வியப்பில்லை!

பல் துலக்கி, படிக்க அமரும் முன்பே நெற்றியில் திருநீறு விளங்க வேண்டும். அக்காவானாலும் சரி, அண்ணாவானாலும் சரி. அப்பாவின் இறைப்பற்று இமயம் போன்ற வலிமை வாய்ந்தது.

எல்லோரும் ஏறத்தாழ ஒரு மணி நேரம் பாடம் படித்த பின்பும் ஒவ்வொருவராகக் குளித்துவிட்டு எட்டு மணிக்கு காலை உணவுக்காகக் கூடுவோம். அந்த நாளில் உணவு மேசையெல்லாம் கிடையாது. வரிசையாகப் பந்திப் பாயில் அல்லது ஜமக்காளத்தில் அமர்வோம். அப்பாவும் அதேசமயம் சேர்ந்து கொள்வார்கள். பேசிக்கொண்டே உணவுண்போம். அவர்கள் பெரும்பாலும் கேழ்வரகு உணவு ஏதாவது சாப்பிடுவார்கள். ''கேழ்வரகு உப்புமா உடம்புக்கு நல்லதடா. கேப்பை சாப்பிட்டால் படிப்பு நல்லா வரும்'' என்று சொல்வார்கள். ஆனால் கட்டாயமில்லை! விரும்பினும் சாப்பிடலாம்; இல்லாவிடில் இட்டலியும் தோசையும் வழமையாக உண்டு! அம்மாதான் பரிமாறுவார்கள்.

நாங்கள் இருபாலாரும் ஒன்றாக அமர்ந்தே உண்போம். பெண் பிள்ளைகளும் ஆண்களோடு சேர்ந்திருந்து சாப்பிடுவது, அம்மாவுக்கு அவ்வளவாகப் பிடிக்காது, ஆனால் அப்பாவுக்குக் கவலை கிடையாது. ''மீனாட்சி, என் பிள்ளைகள் ஒன்றேதான் சாப்பிடவேண்டும், இல்லையா?'' என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்பார்கள். அம்மாவின் கோபம் இருந்த இடந்தெரியாமல் மறைந்துவிடும்!

விபூதி பூச மறந்தவனுக்குச் சாப்பாடு கிடைக்காது என்பது மட்டும் ஒரு கண்டிப்பான விதி. அக்காமார் குங்குமப் பொட்டும் இட்டுக் கொள்ள வேண்டும்.

காலை உணவு முடிந்த பின், ஒவ்வொருவராகப் பள்ளிக்கூடம் போய்விடுவோம்.

0 0 0

விடுமுறை நாட்களில்தான் பெரும்பாலும் எல்லோருமாகச் சேர்ந்து பகலுணவு உண்போம். சாப்பிடும்போது வேடிக்கையாக ஏதாவது பேசிக்கொண்டே சாப்பிடுவோம். பேசக்கூடாது என்ற கட்டுப்பாடெல்லாம் கிடையாது. 'இடையில் குடியேல், கடையில் மறவேல்' என்று [illegible] சொல்வார்கள். உண்ணுவதற்கு முன்பும், உண்டு முடித்த பின்பும் நீர் பருகலாம். சாப்பாட்டின் இடையில் தண்ணீர் பருகினால், சரியாக உணவு கொள்ள முடியாதென்பது பொருளாக இருந்திருக்கலாம்.

மாலை வேளைகளில் பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம். பள்ளியிலிருந்து திரும்பிய பின்பு, ஏதாவது சிற்றுண்டி உண்ட பின்பு விளையாடப் போய்விடுவோம். வீட்டைச் சுற்றி விளையாடுவதற்கு வேண்டிய இடமுண்டு. பம்பரம், கோலி, [illegible], [illegible], பாண்டி-கிட்டிப்புள் எதுவேனும் ஆட்டங்கள். கால்பந்துகூட ஆடுவோம். அருகிலுள்ள பிள்ளைகளும் வந்துசேர்ந்து கொள்வார்கள். விடுமுறைநாட்களில் எப்போதாவது நாடகம் போடுவோம். பெரும்பாலும் 'வள்ளி திருமணம்'தான்- வேலன், வேடன், விருத்தன் ஆகிய மூன்று வேடங்களும் நானே போடுவதுண்டு. அப்பா சில

வ. உ. சி. சுப்பிரமணியம்

(7-ம் பக்கம் பார்க்க)

சூரியனை நம்புமாப்போல்

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் எவ்வித வாழ்க்கைத் தரத்தையுடையவர்களானாலும்சரி தங்கள் அயராத உழைப்பிற்காக ஒவ்வொரு நாளும் அடுத்த நாளானது விடியும்வரை காத்திருக்கிறார்கள்.

அதேபோல, ஸ்திரமான அபரிமித இலாபத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொருவரும் எமது முதலீட்டுத் திட்டங்களில் தளராத நம்பிக்கை கொள்ளலாம். எமது முதலீட்டுத்திட்டங்கள் சூரியனைப்போல் பணத்துறையைப் பொறுத்தமட்டில் அளப்பரிய நன்மை பயப்பவை. காரணம், வரையறையற்ற இலாபகரமான பன்முக கைத்தொழில் வளங்களால் வலுவூட்டப்பட்டுவருகின்றன. பத்தாண்டு காலத்திற்குமேலாக புத்திசாலிகளான முதலீட்டாளர்கள் குறைபாடற்ற, பூரண காப்புடைய முதலீடுகளால் மேலான நன்மையடைந்துவந்துள்ளனர். இப்போது நீங்களும் இந்த நன்மைகளை அடையவென உங்கள் வசதியைக் கருதி உங்கள் அருகில் வந்துள்ளோம்.

குறுகியகாலம்

11%

வட்டியுடன் ஈடுசெய்த
முதலை இலகுவாக திருப்பிப்
பெறும் வசதி.

நீண்ட காலம்

16%

நிலையான 2 வருடங்களுக்கு
வட்டி - 12% 3வருடங்களுக்கு -13%
4 வருடங்களுக்கு - 14% 5 வருட
ங்களும் மேலும் - 16%

மாதாந்தம் வட்டி பெறலாம்



உறவுஸ் அன்ட் புரொபர்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம் - இல 2-3, நவீன சந்தை, பெரியகடை.
கொழும்பு ஏச்பிரி கட்டடம், டி. எஸ். சேனநாயக மாவத்தை கொழும்பு 8 த. பெ. 1077.
தொலைபேசி 94356, 91471, டெலக்ஸ் -1208.

இரசிக சிரோமணி பொன்கிருஷ்ணபிள்ளை-4

இலக்கியக் கட்டுரைகள்

அறம்பாடிற்று

சென்ற வாரம் பொ. கிருஷ்ணபிள்ளையின் இராமாயணக் கட்டுரைகளைப் பற்றி எழுதினேன். இக்கட்டுரையில் வேறு சில கட்டுரைகளின் நயத்தைத் தொட்டுக்காட்ட விரும்புகிறேன். இலக்கியச் சோலையில் எட்டாவது கட்டுரையாக அமைந்திருப்பது 'அறம் பாடிற்று' என்ற கட்டுரை. இது திருக்குறள் சம்பந்தமான கட்டுரை. செந்தமிழ்மணியின் எல்லாக் கட்டுரைகளிலும் மிகச் சிறந்தது இதுவே. இக்கட்டுரையைப் பற்றி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதியிருப்பது இது:-

""எதற்கும் எட்டாமிடஞ் சுத்தமாய் இருக்கவேண்டும் என்பது சோதிடம். இச்சோலையில் எட்டாமிடம் உயிர்ப்பின் இரகம்; அங்கே உய்யும்வகை உயிர் துடிக்கின்றது. அப்பகுதிக்கு 'அறம் பாடிற்று' என்று பெயர். அறக்கடவுள் கை, கால், கண், மூக்கு உள்ள ஓர் ஆண்பிள்ளையாய், 'அறஞ்செய விரும்பு' பாடிய அன்னையின் உடன் பிறப்பாய் அங்கே அரசு வீற்றிருக்கின்றது. அதன் வாய்மலர் ஆயிரத்து முன்னூற்று முப்பது மூவிதழ்கள் அன்றலர்ந்து விரிவதொரு தாமரைப் புஷ்பம். அவ்விதழ்களுள் ஒன்றிலிருந்து பரவுகின்ற சாந்த பரிமளம் அச்சோலையெங்கும் பரவி அறிவைச் சடஞ்செய்ய வொட்டாது தடைசெய்கின்றது.

அறிவினா னாகுவ துண்டோ
பிறிதினோய்
தந்நோய் போற்
போற்றாக் கடை

என்பது அமிர்த இதழ்''

நாலும் குறளாய் வளர்ந்து இரண்டு மாணடியால் ஞாலம் முழுதும் நயம் தளர்ந்தான் என்று ஒரு புலவர் திருக்குறளைப் பற்றி வியந்து பாராட்டுகிறார். செந்தமிழ்மணி இந்த ஒரே ஒரு குறளைக் காலத்திற்குத் தேவையான குறளாக-திருக்குறள் முழுவதையும் அளந்து சரியானபடி காட்டுகிறார் என்பது உண்மை. அவர் கட்டுரையைத் தொடங்கும் விதமே அழகானது. ''ஒரு தினம் தருமதேவதை தன்னருட் பார்வையைப் பூவுலகத்திலே செலுத்தியது என்று தொடங்கி இருபத்தைந்து வரிகளில் திருவள்ளுவர் பிறந்ததை வர்ணித்திருக்கும் அளவு வெகு நேர்த்தியானது. அடுத்து அவர் திருக்குறளைப் பற்றி எழுதியுள்ள வரிகள் அபாரமானவை. அதன்பின் அவர் எழுதியுள்ளதைப் பாருங்கள்:-

''அந்தப் பண்பட்ட மணிகளில் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னே தோற்றம் பெறவிருந்த விஞ்ஞான உலகுக்கு நல்ல வழிகாட்டி நம் புத்தி கூறும் மணி ஒன்று ஒளியை அள்ளிச் சொரிகிறது'' என்று அறிவினா னாகுவ துண்டோ என்ற குறளை நன்கு அறிமுகப்படுத்தி குறளின் மேல் அவர் எழுதியுள்ள வசனங்கள் ஆணித்தரமானவை. அவை பின்வருவது:-

வள்ளுவப்பிள்ளை வாயிற் பிறந்த இவ்வாக்கு ஆக்கந் தரும் வாக்கு முக்காலத்திற்கும் பொருந்தும் மெத்தச் சிறந்த வாக்கு. இக்காலத்திற்குச் சாலப் பொருந்தும் வாக்கு. இக்காலத்திற்கென்றே எழுந்தாற் போன்ற நிறைவான வாக்கு. அணுக்குண்டு யுகத்திற்கேற்ற அருட்குண்டு வாக்கு.''

இரசிகமணி கனக செந்திநாதன்

1956-ம் ஆண்டு ஈழகேசரியில் வெளிவந்த இக்கட்டுரை இலக்கியச்சோலையில் நறுமணம் பரப்பி நிற்கிறது. இக்கட்டுரையின் சிறப்பை அறிந்த திருகோணமலையில் கல்வி அமைச்சு நடாத்திய விழாவில் வெளிவந்த கல்வி மலரில் "ஒரே ஒரு குறள்" என்ற தலைப்பில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இப்படியே இவரது பரிசு பெற்ற கட்டுரையான "தெளிவு தரும் வள்ளுவர்" என்ற கட்டுரை திரட்டு (மஞ்சரி போன்ற பத்திரிகை) என்ற பத்திரிகையில் மறுபிரசுரம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தங்கத்தாத்தாவில் பெரு மதிப்பு

இலக்கியச்சோலையின் கடைசிக் கட்டுரை 'தங்கத்தாத்தா' சோமசுந்தரம் புலவரைப் பற்றியதாகும். தங்கத்தாத்தா பற்றி பொ. கிருஷ்ணபிள்ளையின் மதிப்பு உயர்ந்தது. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரிடம் அவர் வைத்திருந்த பெருமதிப்பு எவ்வளவோ அவ்வளவு பெருமதிப்பை எங்கள் புலவரிடம் அவர் வைத்திருந்தார். பலர் சோமசுந்தரப் புலவரைப் பற்றி எழுதும்போது ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, குழந்தைப் பாடல்கள் காட்டிவிட்டு நிறுத்திவிடுகின்றனர். பண்டிதமணி 'சி. க.' அதிரவும் மாணிக்க கங்கைக்கரையின் அருகில் இருக்கும் கதிர்காமப் பாடலையும் 'வண்ணையின் மொழிகேட்டு வனம் விடுத்த சீதை' என்ற கற்பனைப் பாடலையும் கன்னியாவின் வெந்நீர் ஊற்றுக்களையும் காட்டி புலவரைப் புலவர் உலகில் ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துக்காட்டினார். செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் மற்றவர்கள் தொட்டுக்காட்ட முடியாத ஓர் இடத்தைத் தொட்டுக்காட்டி புலவர் பெருமையை வியக்கிறார். தமிழ் [illegible] குழந்தை அழும் பாலையில் புலவர்க்குக் காட்டி அளிக்கிறது. தத்குழந்தைக்கு உபமன்யு முனிவருக்குப் பால் கொடுத்த சிவனும், ஞானசம்பந்தருக்குப் பால் கொடுத்த உமாதேவியாரும், பாற்கடலிலே பள்ளிகொண்ட விஷ்ணுமூர்த்தியும் பால் தரக் காத்திருக்கிறார்கள் என்று புலவர் கூறுகின்ற அருமையான பாடல்களை அவர் எடுத்துக்காட்டிவிட்டு வள்ளுவப் பெருந்தகையோ 'முப்பால்' என்று கூறப்படுகின்ற திருக்குறளை உனக்கு ஊட்டத் தயாராக இருக்கின்றார். முச்சங்கமாகிய காமதேனுவிலிருந்து அமுதைக் கறந்து தயாராக வைத்திருக்கின்றார் என்று புலவர் கூறும் பாடலை அழகுற எடுத்துக்காட்டும் இலக்கிய ரசனையின் சிறப்புக்குச் சான்றாகும் அவரின் பாடல் பின்வருவது:-

''முற்றாத தெய்வமொழி
முச்சங்கச் சிமட்டி
வற்றாது பாற்சுரக்கும் வான்
பசுக்காண் அம்மானை
வற்றாது பாற்சுரக்கும் வான்
பசுவே ஆமாயின்
மற்றோர் பால் கறந்து
வைத்தார்கா ணம்மானை
வள்ளுவர் முப்பாலிகறந்து
வைத்தாரே அம்மானை''.

தருவளர்த்து உயிரோம்புவோம்

காடுகளையே அழிவுசெய்து மழை பெய்வதையே தடைப்படுத்தும் இழிசெயலைத் தடுக்கும் முகமாக இவ்வருடம் இலங்கை அரசாங்கம் மரம் நடும் இயக்கத்தையே நடாத்தி வருகிறது. இயற்கை வனப்பிலும் பட்சிவகையிலும் வண்ணாத்திப் பூச்சியிலும்கூட தன் மனதைப் பறிகொடுத்த செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் எத்தனையோ வருடங்களுக்குமுன் ''தருவளர்த்து உயிரோம்புவோம்'' என்ற கட்டுரையை எழுதியுள்ளார்கள். இக்கட்டுரை கிருஷ்ணபிள்ளை அவர்களது மனோநிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. மிக நீண்ட கட்டுரை அது. பத்துப்

[7-ம் பக்கம் பார்க்க]

மர்மம்

தர்மா தான் எதையும் தொடவில்லை என்றான். ஆனால் வனஜாவின் கைப்பை ஓட்டைப்பட்டிருந்தது. விஷத்தை அந்த இடம் பின்பு அவன் கைப்பையை மூடியிருக்கமுடியாது. தர்மா சொன்ன ஒரு சிறிய பொய் அவனைக் காட்டிக்கொடுத்து விட்டது.

குழந்தைப் பராமரிப்புக்கு
உன்னதமானது
கெமிகெயர்

குழந்தைப்பராமரிப்புக்கு மிக
நவீனமானதும், சிறந்ததும் கெமிகெயர்.
அது இறகுபோன்று மென்மையானது . . .
உன்னதமான டால்க் கொண்டு
விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது . . .
குழந்தையின் மிருதுவான சருமத்திற்கு
குளிர்மையும், இதமும் அளிப்பது . . . .
குழந்தையை மகிழ்ச்சியாக,
இன்முகத்துடன் வைத்திருப்பது.

அன்னையின் பரிவுக்கு
அடுத்தது கெமிகெயர்

CIC
ஏக முகவர்கள்:
கெமிக்கல் இண்டஸ்ரீஸ்
(கொழும்பு) லிட்.,
த. பெ எண் 352, கொழும்பு.

இலவசமாக உங்கள் குழந்தையின் புகைப்படம்

கெமிகெயர் பேபி டால்க் பக்கெற்றிலிருந்து 3 இறகுகளை வெட்டி எடுத்து எமக்கு அனுப்புங்கள். நாம் உங்கள் குழந்தையின் புகைப்படத்தை இலவசமாக, சிறந்த ஒரு ஸ்டுடியோவில் எடுப்பதற்கு ஏற்பாடு செய்வோம்.

தயவு செய்து இறகுகளை
கெமிகெயர்
த.பெ. 1610 கொழும்பு
என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

ராணி
(யாழ்-நகர்)
ஜெய்சங்கர் லக்ஷ்மி
ஜெயா முத்துராமன்
நடித்த
தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம்
கனிமுத்துபாப்பா

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா—ஜெயசுதா—நாகேஷ்
நம்பியார் நடித்த
மன்னவன் வந்தானடி
(ஈஸ்ட்மன் கலர்)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7693
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-லதா
நடித்த
வீட்டுக்கு வந்த மருமகள்

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்

28-1-77 முதல்
வெள்ளி விழா
சித்திரம்
மக்கள் திலகத்தின்
இதயக் கனி

இலக்கிய கட்டுரைகள்—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பன்னிரண்டு பக்கங்களில் அதை யாராவது வெளியிட்டால் இக்காலத்திற்கு உதவும். அக்கட்டுரையிலிருந்து சில பகுதிகளைப் பாருங்கள்:-

"செடிகளும் கொடிகளும் மரங்களோடு பின்னிப் பிணைந்து பசுமை கொழிக்கும் நிலப்பரப்பினைப் பொட்டல் வெளியாக்கி நகரம் கொண்டிருக்கும் மொட்டைமாடியும் கட்டி மகிழ்கிறான். பங்குனி மாதம் வெள்ளை வெயில் எறிக்கும் நண்பகலிலும் குடையும் செருப்புமின்றித் தருக்கள் தரும் குளிர் நிழலூடே மண் பாதையில் மகிழ்வுடன் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த அதே மனிதன் அந்த பாதை மாற்றமடைந்து கொண்டு தரும் கொடுவழியாய் கருகியதும் தாரோடும் சேர்ந்த கருங்கல் பாதையாய் மாற்றமடைந்ததைப் பார்க்கின்றான்."

"பட்சியினங்கள் தந்த வண்ணங்களைக் கண்ணுக்கு விருந்தும் பலவகை வெள்ளிசையைக் காற் செவிக்கு அமிழ்தும் தந்த கடற்கரைச் சோலைகள் பல இன்று இருந்த இடம் தெரியாதொழிய அவ்விடத்திலே வானொலிக் கருவி பூட்டி அந்நிய நாட்டுக் கீதங்களாலும் கொடுங் குரல்களாலும் செவி பெற்ற பயனை அனுபவிக்கத் தடைசெய்யும் மனிதன் தான் முன்னேற்றமடைந்து விட்டதாக புளகாங்கிதமெய்துகிறான்.

பாரதி தரும் நேரசூசி

செந்தமிழ்மணி சில கட்டுரைகளை பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவகையில் எழுதியுள்ளார். அப்படியாகப் பாரதியாரைப் பற்றிய கட்டுரைகள் சிலவற்றை வரைந்துள்ளார்.

'காலை எழுந்தவுடன் படிப்பு' என்ற பாரதியாரின் பாட்டை விளக்கும்முகமாக அவர் எழுதிய முன்னுரையில் எப்போதும் படி, படி என்று நெருக்கும் தகப்பனையும் பிள்ளை என்ன படிக்கிறான் என்பதையும் நகைச்சுவையாகக் காட்டுகிறார். இதோ அவர் காட்டும் இக்காலத் தந்தையையும் மகனையும் பாருங்கள்:-

"இப்போதைய தந்தைமார் பிள்ளைகள் விளையாட விடாமல் புத்தகமும் கையுமாக இருக்கவேண்டுமென்றே விரும்புகின்றனர். அதற்கேற்பவே பிள்ளையும் புத்திசாலித்தனமாக நடக்கிறான். தகப்பனுடைய காதிலே தான் படிப்பது கேட்கத்தக்கதாக ஏதோ புலம்பியபடியே நித்திரையாகிவிடுகிறான்... சிலவேளை பிள்ளையின் கையில் இருப்பது மஞ்சளறையின் மர்மம் என்ற நாவலாயிருக்கலாம். அவன் தந்தை இட்டபோது அவன் உரக்கக் கத்துவது நன்னூற் சூத்திரமாயிருக்கும். தந்தைக்கு அவ்வளவில் பரம திருப்தி. தந்தையின் வார்த்தையை மேற்கொண்டு மைந்தன் எப்போதும் படித்தால் அவன் எங்கேயாவது சில வருடங்களின்பின் வைத்தியசாலையில் இருக்கவேண்டியவனேயன்றி சர்வகலாசாலை புகமுடியாது.

பிற கட்டுரைகள்

இல்லறமும் நற்பணியும் என்ற அவரது கட்டுரையில் ஓர் இல்லுக்குரிய பெண் இருக்கவேண்டிய நிலைமையை விளக்குகிறார். நாம் நாலாம் வகுப்பில் படித்த "பாலுந் தெளிதேனும்" என்ற பாடலுக்கு அவர் விளக்கமாக 'ஒன்றுக்கு நாலு' என்ற கட்டுரையைத் தீட்டியுள்ளார். பார்வதியும் பரமசிவனும் யோசித்து விநாயகருக்கு ஒரு வேலை, ஆம் விநாயக மூனிவருக்கு "விகிதர்" வேலை வாங்கிக்கொடுத்து "இனதிக்கல்" வேலையை உயர்த்த உத்தியோகமாக்கி விநாயக 'விகிதர்' என்ற நாடக உருவமான கட்டுரையில் அவர் எழுதியுள்ள விதம் நகைச்சுவை மிளிர்வதாக இருக்கின்றது.

எப்போதும் கதர் கட்டி வழக்கமாகத் தன்னுடைய விரதமாகக்கொண்ட செந்தமிழ் மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் மகாத்மாகாந்தியிடத்தில் மிகுந்த பக்தியுடையவர். அவருடைய வாழ்க்கையை ஆறுமுகநாவலரது வாக்கிய 'சிவன் தாம் படைத்த இச்சரீரத்தை காக்கும்பொழுது அழிப்பவர் ஒருவரும் இல்லை. படைத்துக்காக்கும் அவரே பின்னும் அழிக்கும் பொழுது அதனை இப்பூமியில் வைத்துக்காப்பவர் ஒருவருமில்லை. ஆதலால் ஆன்மாக்கள் தமக்கு உறவாகிய இவனை மறந்து... நமது சரீரத்திலே பற்றுவைத்து அதனைத் தாமே பாதுகாக்க வல்லாரென முயலுதல் அறிவாமை'' என்ற வாக்கியத்தோடு இணைந்த 'அடிகளார் வாழ்வு' என்ற கட்டுரையை அழகாக எழுதியுள்ளார்.

மூன்றாவது நான்காவது கட்டுரைகளாகிய இரு கட்டுரைகளிலும் சில இலக்கிய கட்டுரைகளைத் தொகுத்துக்காட்டினேன். அடுத்தவாரம் அவரது சமயக் கட்டுரைகளை அறிமுகப்படுத்த எண்ணியுள்ளேன்.

சிலம்பம் .. ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சமயம் தம் நண்பர்களோடு வந்து பார்த்துப்பாராட்டுவார்கள். ஒன்றிரண்டு ரூபாய் வெகுமானம் கிடைப்பதும் உண்டு. (அந்தக் காலத்தில் அது பெரிய தொகையாகும்!)

எப்போதாவது ஓட்டுத்திண்ணையில் அமர்ந்து சீட்டு விளையாடுவோம். சீட்டாட்டம் அப்பாவுக்கு ஒரு பெரியபுதிர். எப்போதாவது எங்களுடன் வந்து விளையாட ஆசைப்படுவார்கள், மிகுந்த சிரமத்துடன் அவர்கள் கற்றுக்கொண்ட ஒரே சீட்டாட்டம் 'தடி கொடுக்கும்' விளையாட்டு! 'கழுதை' ஆட்டம் என்றும் இதைச் சொல்வார்கள். என்னோடு அப்பா இந்த ஆட்டம் ஆடுகையில் அவர்கள் 'தடி' வாங்கிவிட்டபோ, கொடுத்துவிட்டாலோ அடையும் மகிழ்ச்சி இருக்கிறதே, அது ஒரு இணையில்லாத ஒன்று.

0 0 0

எனக்கு எட்டு ஒன்பது வயதிருக்கும். அப்போதுதான் 'சைக்கிள்' வந்த புதிது. எனக்கு மிதிவண்டி விட்டுப் பழகவேண்டுமென்று ஆசை. அம்மாவிடம் போய்க்கேட்டேன். தினம் ஓரணா கொடுக்குமாறு அம்மாவிடம் கூறினார்கள். ஓரணாவுக்கு ஒரு மணிக்கூறு சைக்கிள் விடப் பழகலாம். இரண்டு, மூன்று நாட்கள் பழகினேன். முழுமையாகக் கற்றுக்கொள்ள முடியவில்லை. எனக்குக் கால் சரியாக எட்டாது. விரைவில் கற்று [சண்டியன்] சாம்பியன் ஆகிவிடவேண்டுமென்று வெறி. காலை இருட்டில் வீட்டுக்குத் தெரியாமல் மிதிவண்டி பழகத்தொடங்கினேன். இது எப்படியோ அம்

(8ம் பக்கம் பார்க்க)

நாகலிங்கம்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார் - சுஜாதா
மயங்குகிறாள் ஒருமாது

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி - விஜயா
தங்கப்பதக்கம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
அவள் ஒரு
தொடர்கதை

ராஜா
(யாழ்நகர்)
தினசரி
4 காட்சிகள்
★ ஜெய்சங்கர்
★ நிர்மலா
★ ஏ.வி.எம்.ராஜன்
★ சாவித்திரி
★ பாலாஜி
மற்றும் பலர் நடித்த

தாய்க்கு ஒரு பிள்ளை

தென்னகத்தில் 175 நாட்களுக்கு மேல்
ஓடிய வெள்ளி விழாச் சித்திரம்
வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் ★ ஸ்ரீவித்யா
★ சுந்தரராஜன் ★ ஜெயசுதா ★ நாகேஷ்
நடித்த
K. பாலசந்தரின்
அபூர்வ ராகங்கள்
என்னுடைய அப்பா யாருக்கு மாமனாரோ அவருடைய மருமகளின் அப்பா என் மகனுக்கு மாமனார் ஆனால் அவருக்கும் எனக்கும் என்ன உறவு?
இது தான் கதை.

Regal
(Jaffna)
Daily at 4-45, 7. & 9-30. p. m.
Blood and guts story of man's strength weakness by the Maker of Rashomon
TOSHIRO MIFUNE in
SEVEN SAMURAI
Winner of Silver Lion at Venice International Film Festival presented commercially for the first time in Sri Lanka.

RIO (Jaffna)
Daily 10-30, 4-45, 7-15 & 9-45
If you Love your
Neighbour; Don't
throw your trousers
at his wife's face
or poke your
face into his Bedroom
A Hilarious
Rib Tickling Comedy
A Family Show.

ANGLO EMI FILM DISTRIBUTORS LIMITED
presents a HAMMER production
LOVE THY NEIGHBOUR
JACK SMETHURST
RUDOLPH WALKER, NINA BADEN-SEMPER
and KATE WILLIAMS
EMI

கிதார்வாத்தியத்தில் கர்நாடக சங்கீதம் வாசிக்கும் சீலன்

கிதார் வாத்தியத்தில் கர்நாடக இசையை வாசிக்க முடியுமா?

இப்படிக் கேட்டால் மேலை நாட்டினர் உட்பட எல்லாரும் சிரிப்பார்கள். ஆனால் முடியாது என்று சொல்பவர்களைப்பார்த்து யாழ்ப்பாணத்து இளைஞரான கலைஞர் சீலன் சிரிக்கிறார். இருபத்து மூன்று வயதான கலைஞர் சீலன் தமது புத்தித் திறத்தால் கிதார் இசைத்துறையில் உலகசாதனையொன்றை நிலைநாட்டப்போகிறாரென்றே என் மனம் சொல்கிறது.

கிதாரிலே கர்நாடக சங்கீதத்தை வாசிக்க முடியுமென்றும் அதனை வாசிக்கும் விதிமுறைகளை விளக்கியும் மேற்கத்திய சங்கீத கட்டுப்பாட்டுச் சபைக்குக் கலைஞர் சீலன் எழுதியுள்ளாராம். சபை இதனை ஏற்கும் பட்சத்தில் கிதார் இசைத்துறையில் உலகிலேயே ஒரு புதிய திருப்பம் நிச்சயம் ஏற்படும். அப்பொழுது நமது சீலனுக்குச் சர்வதேச அந்தஸ்தும் கிடைக்கும். இதனால் நமக்கெல்லாம் பெருமை கிட்டும்.

சீலனைச் சந்திக்கவேண்டுமென்று அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர் இல்லத்தின் முன் 'ஹால்' ஒரு கலைக் கூடமாக நிறைந்திருந்தது. ஹார்மோனியம், வீணை, தபேலா, வயலின், கிதார்கள் என்றென்னவோ வாத்தியங்களெல்லாம் இருந்தன. அதேமாக அவர் எல்லா வாத்தியங்களையும் இசைக்கக் கற்றுக் கொண்டுள்ளார். ஸ்பானிஷ் கிதார், ஹவாயின் கிதார், வயலின், வீணை என்று சில வாத்தியங்களை இசைத்துக்காட்டினார். கிதார் வாத்தியத்தில் மேற்கத்திய சங்கீதத்தையும், ஹிந்துஸ்தானி, கர்நாடக சங்கீதத்தையும் மிக அழகாக அவர் வாசிக்கிறார். ஹவாயின் கிதாரைத்தான் அவர் உபயோகிக்கிறார். எல்லாருமே ஹவாயின் கிதாரை வாசிப்பதில்லையென்றும் அது கஷ்டமான ஒரு வாத்தியமென்றும் என் அருகிலிருந்த நண்பர் விளக்கினார். யாழ்ப்பாணத்தில் சீலன் உட்பட இலங்கையிலேயே நால்வர் மட்டும்தான் ஹவாயின் கிதார் வாசிப்பதில் பிரசித்திபெற்றுத் திகழ்வதாக நண்பர் சொன்னபோது சீலனைப்பற்றி என் உள்ளம் பெருமையால் விம்மியது.

கிதார் வாத்தியத்தில் அவர் கர்நாடக சங்கீதத்தை வாசிக்கும்போது அசல் வயலின் போன்றே இருக்கிறது. இது ஒரு சாதனைதான். வயலின் வாசிப்பதில் உலகில் தனித்துவம் பெற்று விளங்கிய செனகடயா போன்று மேற்கத்திய இசை உலகில் சீலனின் தனித்துவம் மிளிரும் என்பதில் ஐயமில்லை. இவரது இசைப் புலமையை எல்லாருமே அனுபவிக்கவேண்டுமென்ற பெருவிருப்புடன் சூரியா 'ரெக்கோடிங்' கம்பெனியார் இவரது வாத்திய இசையை 'ரெக்கோட்' செய்து வெளியிடவுள்ளார்கள்.

கிதாரில் தனித்துக் கர்நாடக இசைக் கச்சேரி செய்வதற்குத் தமக்கு இருந்துவரும் ஆவலை நிறைவுசெய்வதற்குத் தம்மிடம் போதிய நிதிவசதியில்லாமலிருப்பதாக அவர் என்னிடம் தெரிவித்தபோது என் மனம் மெத்தும் சங்கடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் பல நல்ல கலைஞர்கள் இவ்வித பணக்கஷ்டம் காரணமாக ஒதுங்கியிருப்பதால் அவர்கள் திறமை வெளிப்படமுடியாதிருப்பதாகவும் மேலை நாடுகளில் இசைக் கலைஞர்களுக்குப் பெருமதிப்பு அளிக்கப்படுவதாகவும் அங்கெல்லாம் இசைக் கலைஞர்கள்பற்றிச் சரித்திரமே எழுதப்படுவதாகவும் கலைஞர் சீலன் பெருமையுடன் கூறினார்.

வீணை வித்வான்

கலைஞர் சீலன் வீணைவாசிப்பதிலும் கற்றுக்கொண்டுள்ளார். அண்மையில் யாழ். றிம்மர் மண்டபத்தில் முற்றும் யாழ்ப்பாணத்துக் கலைஞர்களைக்கொண்டு நடத்தப்பட்ட மெல்லிசை நிகழ்ச்சியில் சீலனின் வீணையும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் மொத்தம் பதினொரு வாத்தியங்கள் இடம் பெற்றன. இந்நிகழ்ச்சியை நெறிப்படுத்தியவரும் கலைஞர் சீலன் தான்.

சபா

வீணை வித்வான் நல்லூர் பி. ஆறுமுகம்பிள்ளையவர்களிடம் இரு வருடங்களாகப் பயிற்சிபெற்றுவரும் சீலன் ஒரு தேர்ந்த வித்வானைப் போன்று வீணையை மீட்டுகின்றார். இந்தியாசென்று மேலும் பயிற்சிபெறுவதற்குத் தமது ஆசிரியர் திரு. ஆறுமுகம் பிள்ளை ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் சீலன் தெரிவித்தார்.

தமது நண்பரான ரஞ்சன் என்பவரே தமக்குக் கிதார் வாத்தியத்தில் ஆர்வத்தை ஊட்டியவரென்றும் பின்னர் கொழும்பில், ஆசியாவிலேயே அதிவேக விரலோட்டக்காரரென்று வர்ணிக்கப்படும் திரு. குமார் நவரத்தினத்திடம் இரு வருடங்கள் பயிற்சிபெற்றதாகவும் சீலன் சொன்னார்.

சீலன் ஓர் ஓவியரும் கூட. அவர் வரைந்த ஓவியங்கள் அந்த ஹாலின் அழகிற்கு உயிரூட்டிக் கொண்டிருக்கின்றன. சாதனைமிக்க இளைஞர் சீலன்!

பொப் இசை

பொப் புயல் வீசிக்கொண்டிருக்கும் இந்நாளில் இளைஞரான சீலன் மட்டும் ஏனோ கர்நாடகமாக இருக்கிறாரென வினவியதற்குச் சீலன் சொன்னார்:

"பொப்புயல் இப்போதெல்லாம் ஓய்ந்துவிட்டது. அது ஒரு புயல்தான். திடீரென்றுதோன்றித் திடீரென மறைந்துவிடும். மாரிகாலத்துத் தவளைகளைப் போன்றது. அதில் இசைஞானமில்லை. எங்கெங்கோ போய் இருந்து யாழ்ப்பாணம் வந்து பொப், மந்திரத்தால் இளைஞர் கூட்டத்தைமயக்கிபணத்தைக் கொள்ளையடித்துச் செல்கிறார்கள். ஆனால் இதனை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்தவர் எனது மதிப்புக்குரிய நண்பர் நித்தி கனகரத்தினம்தான். கவர்ச்சியாகவும் அடக்கமாகவும் அவர் பொப் கச்சேரிகள் செய்துவந்தார். சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் உயர்ந்த கருத்துக்களைத் தமது பாடல்களில் போதித்திருந்தார். ஆனால் 'சோளஞ்சோறு பொங்கட்டுமா' என்பன போன்ற சில பாடல்களின் மூலம் அவரது மதிப்பு இறங்கலாயிற்று. இன்றும் எந்தவீட்டுக்குழந்தையும் இப்பாடலை முணுமுணுப்பதைக் கேட்கலாம். இப்பாடலின் மூலம்தான் நல்ல நல்ல கருத்துக்களை நாட்டுக்கு எடுத்துக் கூறிய நல்லவரும் பண்பாளரும் அறிவாளியுமான நித்தியின் மதிப்பு யாழ்ப்பாணத்துப் பெரியவர்கள் மத்தியில் குறைவதாயிற்று."

கலைஞர் சீலன் யாழ். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆசிரியராயிருந்து காலஞ்சென்ற திரு. நீலநடராஜாவின் புதல்வராவார். இவ்வித்தியாலயத்திலேயே சீலனும் கல்வி பெற்றார். அவரது வீடும் வித்தியாலயத்தின் அருகில்தான். பாவம், சீலனுக்கு இரண்டுவயதாயிருக்கும்போதே தந்தையை இழந்துவிட்டார். 'சீலன்ஸ் ரோஸ்' என்ற பெயரில் இசை நிறுவனமொன்றை அவர் நடத்தி வருகிறார். அவரது ஆசை:

உலகெல்லாம் கர்நாடக இசை பரவவேண்டும், தமது பங்கும் அதிற்சேரவேண்டும்.

1892-க்குப்பின் பெருவெள்ளம்

ஜாகர்த்தா, ஜன. 22

ஜாகர்த்தாவில் 85 ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட பயங்கர பெருவெள்ளத்தினால் ஒரு லட்சம்பேர் வீடிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

1892ம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தில் 7 பேர் பலியாகியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ)

சிலம்பம்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

பாவுக்குத் தெரிந்துவிட்டது. வீடு திரும்பியதும் 'காக காரணமற்போன படலம்' பற்றி விசாரணை நடத்தினார்கள். நான் உண்மையைச் சொன்னதால் சரியான பூசை கிடைத்தது! அன்றிரவு பட்டினி-அதுவும் தண்டனையில் ஒரு பகுதி. அத்துடன் மிதிவண்டிப் பயிற்சிக்கு முற்றுப்புள்ளிவிழுந்தது. இன்றளவும் எனக்குச் சைக்கிள்தான் தெரியுமே ஒழிய, அதனை விடத்தெரியாது.

0 0 0

அப்பாவுக்கும் பலப்பல வீர விளையாட்டுக்கள் தெரியும் என்று அம்மா சொல்வார்கள். கத்திச் சண்டை, மல்யுத்தம், குதிரையேற்றம், சிலம்பம் - எல்லாம்தெரியுமாம்.

ஒரு நிகழ்ச்சி நன்கு நினைவிருக்கிறது. அம்மன் கோவில் கொடைவிழா. மூன்றாமிரவில் அம்மன் எழுந்தருளி ஊர்வலம் வந்தது. முன்னால் பொய்க்கால்குதிரை, கும்பக் குடம், மயில் நடனம் போன்ற கேளிக்கைகள் நடந்தன. அம்மன் சப்பரத்துக்கு முன்பு சிலம்ப விளையாட்டு வழக்கமாக எங்கள் வீட்டுமுன்பு சற்று நேரம் நின்று ஆடி, வெகுமானம் வாங்கிச்செல்வார்கள். 'வ. உ. சி. ஐயா' கையால் வேட்டியும் நேரியலும் வாங்கிச் செல்வதென்றால் விளையாட்டுவீரர்களுக்கு 'பரம வீர சக்ர' விருது பெறுவது போலப் பெருமை.

சிலம்பம் ஆடும் வீரர்கள் வீட்டு முன்னால் நெடுநேரம் ஆடினர். கம்பு வீசுவதில்தான் எத்தனை வகை, எத்தனை திறமை.

திடீரென அப்பாவும் சிலம்ப ஆட்டத்தில் இறங்கிவிட்டார்கள். அப்போது அவர்களுக்கு அறுபது வயதிருக்கும். ஒரு மணி நேரம் எல்லோரும் வியக்கும்வண்ணம் சிலம்பம் ஆடிக் கைதட்டல் பெற்ற காட்சி மறக்கமுடியாத ஒன்று. சிலம்பக்குழுத்தலைவர் கேட்ட பரிசு என்ன தெரியுமா? வேட்டியும் நேரியலுமல்ல; அப்பா வீசிய கம்புதான், தங்களுக்குப் பரிசிலாக வேண்டுமென்று கேட்டார். சிலம்பம் ஆடிய கம்பும்கொடுத்தார்கள்; தம் கையாலேயே முண்டாசு கட்டியும்விட்டார்கள்! வீரத்துக்கு மதிப்பு.

மன்கோசெப்

சுவிற்சலாந்து 'எம்ஸர்வேர்க்' கொம்பனியாரின்
நவீன தயாரிப்பு.

சகல இலைப் பயிர்களையும் தாக்கும்
பூஞ்சண நோய்களைக் கண்டிக்கும்.

விசேஷமாக
மிளகாய், வெங்காயம், புகையிலை
உருளைக்கிழங்கு, திராட்சை

முதலிய பயிர்களின் பங்கசு நோய்களுக்கு
மிகவும் சிறந்த நாசினி

மன்கோசெப்

சிறந்த விவசாய நிபுணர்களால்
சிபார்சுசெய்யப்பட்டுள்ளது

மன்கோசெப்

16 அவுன்ஸ் பைக்கட் விலை 27ரூ 50 சதம் மட்டுமே

சில்லறையாகவும் மொத்தமாகவும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

ரோரு

32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளைகள்: தொலைபேசி: 7651

ரோரு
237, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

ரோரு
சுண்டிக்குளம் சந்தி, தர்மபுரம்.

மரண அறிவித்தல்

திருமதி நாகம்மா

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா காலமாகிவிட்டார். இவர் காசுலிங்கத்தின் அருமை மனைவியும், செட்டியார், சின்னத்துரை [மானிப்பாய் கிராம சபை], தம்பிஐயா [வட்டுக்கோட்டை கிராம சபை], கனகையா [சுன்னாகம் பட்டின சபை], சங்கரப்பிள்ளை [காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்], கோசம்மா, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் தாயாரும், வேலாயுதபிள்ளை [இலங்கை மின்சார சபை சுன்னாகம்], சுப்பிரமணியம் [யாழ். மாநகர சபை], நாகம்மா, இரத்தினம், திலகமணி, பேபின்பவதி, டைனேஸ்வரி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று 23-1-77 பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 5316

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர்
அலுமினியம்
ONE-DOLLAR

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49. Jaffna. Telegrams Eelanadu. Telephone 389. Registered as a Newspape in Sri Lanka.